Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 6, 2021

வெள்ளிக்கிழமை, 6 ஒகஸ்ட் 2021 | ஒளி: 07 கதிர்: 67 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



# பிறழ்கிறது டெல்டா

## புரிதலுடன் செயற்படுமாறு அறிவிப்பு

டெல்டா பிறழ்வு மிகவேகமாகப் பரவுவது தொடர்பில், மக்கள் மிகுந்த அவதானத்துடனும், புரிதலுடனும் செயற்பட வேண்டுமென சுகாதார பிரிவு அறிவித்துள்ளது.

பெரும்பாலான வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவுகள், நோயாளர் விடுதிகள், இடவசதியுள்ள அனைத்து இடங்களிலும் நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

"இதனைப் பாரதூரமான நிலைமையாகக் கருத வேண்டும்" என, பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

காலி, கராப்பிட்டிய கொரோனா சிகிச்சை நிலையத்தில் 120 கட்டில்கள் காணப்படுகின்றன. அதில், 220 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இரத்தினபுரி வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள கட்டில்களுக்கு மேலதிகமாக அங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அங்கு 70 கட்டில்கள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், சுமார் 100 கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தொடர்ச்சி P2

# கர்ப்பிணிகள் வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதி



அரசாங்க தொழிற்துறைகளில் பணியாற்றும் கர்ப்பிணிப் பெண்கள், வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த மருந்து உற்பத்தி, வழங்கல், ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன, ஏனைய அரச ஊழியர்களின் பணி முறைமையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

தொடர்ச்சி P2

### கொவிட் தொற்றாளர்கள் அதிகரிப்பு

# கண்களுக்கு முன்பாக மயங்கி விழுந்து இருவர் மரணித்தனர்

## உயிரைக் கொல்லும் களுபோவில கதை



களுபோவில வைத்தியசாலையில், கொரோனா தொற்றாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஊடகவியலாளர் திலக்ஷனி மதுவத்த, சமூக வலைத்தளங்களில் எழுதியுள்ளமை மனதை உருக்குவதாய் அமைந்துள்ளது.

தொடர்ச்சி P2

# திருவிழாவில் பங்கேற்ற 100 பேருக்கு கொரோனா

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, களுவங்கேணி மாரியமன் கோவில் திருவிழாலில் கலந்துகொண்ட கோவில் தலைவர், செயலாளர், குருக்கள் உட்பட 100 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளமை நேற்று வியாழக்கிழமை (05) கண்டறியப்பட்டுள்ளது.

அதனையடுத்து, அந்தக் கிராமசேவகர் பிரிவான வந்தாறுமூலை கிழக்கு கிராம சேவகர் பிரிவை முடக்கி தனிமைப்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது என செங்கலடி பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் சிவசேகரன் சிவகாந்தன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# எதிர்க்கட்சித் தலைவரை தடுத்தமை சிறப்புரிமையை மீறும் செயலாகும்

தங்களுடைய சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கையை முன்வைத்து, நேற்று முன்தினம் (4) ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுத் திரும்பிகொண்டிருந்தபோது, கைதுசெய்யப்பட்ட ஆசிரியர்களை பொலிஸ் நிலையத்துக்கு பார்வையிடச் சென்ற எதிர்க்கட்சித் தலைவரை தடுத்தமை,அவருடைய சிறப்புரிமை மீறும் செயலாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி, பாராளுமன்ற உறுப்பினருக்கு உரிய சிறப்பு சலுகையின் கீழ், எந்தவோர் அரச நிறுவனத்துக்குள்ளும் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதென எதிர்க்கட்சியின் செயலாளர்



ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# "உயிரோடு இருக்கும் நோயாளி, இறந்தவரை விட குணமடைய அதிக வாய்ப்புள்ளது"

## விசேட நிபுணர் வைத்தியர் சங்கம் அறிக்கை

பயணக்கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமையை கடுமையாக விமர்சனத்துக்கு உட்படுத்தியுள்ள விசேட நிபுணர் வைத்தியர் சங்கம், இது எரியும் நெருப்பில் வைக்கோலை போடும் செயலாகும் எனத் தெரிவித்துள்ளது.

வைத்திய நிபுணர்களான வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ, வைத்திய ஆர். ஞானசேகரன் ஆகியோர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# தடுப்பூசியை பெறுவதற்கு இலவச பயணச் சேவைகள்

## பிரதமரின் கோரிக்கைக்கு இரு நிறுவனங்கள் இணக்கம்

தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கு போக்குவரத்து வசதியற்ற மக்களுக்காக 50,000 இலவச பயணச் சேவைகளை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை செஞ்சிலுவை சங்கம் (SLRCS), ஊபர் ஸ்ரீ லங்கா (UBER SRI LANKA) ஆகிய நிறுவனங்கள் உடன்பாடு தெரிவித்துள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி மாவட்டங்களில் கொவிட்-19 சிகிச்சை பணிகளில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார ஊழியர்களுக்காக இதுவரை செயற்படுத்தப்பட்டுள்ள இலவச போக்குவரத்து சேவை திட்டத்தின் முன்னேற்றம் குறித்து நேற்று (05) ஆராயப்பட்டது.

தொடர்ச்சி P2

### ரிஷாட் எம்.பி வீட்டு விவகாரம்

# மட்டு.மாநகர சபையில் கண்டனம்



■ வா.கிருஸ்ணா

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிப் பெண்களாக கடமையாற்றிய டயகம் சிறுமி உட்பட பலர் மரணித்துள்ளமைக்கு, மட்டக்களப்பு மாநகர சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# கட்டுக்கடங்காது கொரோனா சென்றுவிட்டது

■ பா.நிரோஸ்



கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு, கொரோனா வைரஸ் சென்றுள்ளதாக தெரிவித்த முன்னாள் பிரதமரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க, கொரோனா வைரஸ் தொடர்பான ஜனாதிபதி செயலணியை கலைத்துவிட்டு, அதன் பணிகளை அமைச்சரவைக்கு வழங்க வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார்.

தொடர்ச்சி P2

### ஹிஷாலினிக்கு நடந்தது என்ன?

# சபைக்கு அறிவித்தார் ரிஷாட்

■ பா.நிரோஸ்



எனது வீட்டு வேலைக்கு வரும்போது 16 வயதை பூர்த்தியடைந்தவராக ஹிஷாலினி இருந்தார், அவர், ஒரு பண்பான சகோதரியாவார்.

தொடர்ச்சி P2

# மலையக மக்களுக்கு செந்தில் அறிவுரை



கொரோனா வைரஸின் டெல்டா திரிபானது உலகை உலுக்கிவருவதால் சூழ்நிலையின் ஆபத்தை உணர்ந்து அவதானமாகவும், பாதுகாப்பாகவும் இருக்க வேண்டுமென மலையக மக்களிடம் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளரும் இ.தொ.காவின் உப தலைவருமான செந்தில் தொண்டமான் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### கிழக்கில் தமிழ் மொழிக்கு

# உரிய அந்தஸ்தை வழங்கவும்

■ ஏ.எம்.ஏ.பரீட்



கிழக்கு மாகாணத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தமிழ் மொழிக்கும் உரிய இடம் வழங்குமாறு, திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாணத்தில் மூன்று இன மக்களும் வாழ்கின்றார்கள். இதில் 75 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

இந்நிலையில், கிழக்கு மாகாண உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பல விடயங்கள் சிங்கள மொழியில் மட்டுமே பதிவேற்றப்படுகின்றன. குறிப்பாக, தங்களோடு சம்பந்தப்பட்ட சகல தகவல்களும் சிங்கள மொழியிலேயே பதிவேற்றப்படுகின்றன.

தொடர்ச்சி P2

### இராணுவ சீருடையுடன்

# மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, விளாவோடை வயல் பகுதியில் இருந்து,நேற்று (05), இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த வயல் காணியை சீரமைத்த காணி உரிமையாளர், எச்சங்கள் இருப்பதை அவதானித்து, அது தொடர்பில், கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# பிறழ்கிறது டெல்டா

கண்டி தேசிய வைத்தியசாலையில் கொரோனா நோயாளர்களுக்காக 54 கட்டில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனினும், 156 கொரோனா நோயாளர்கள் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படும் தெல்தெனிய வைத்தியசாலையிலும் நோயாளர்களின் எண்ணிக்கை கொள்ளளவை அண்மித்துள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள 160 கட்டில்களிலும் நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தெல்தெனிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் 5 கட்டில்கள் காணப்படுவதுடன், அவை அனைத்தும் சிகிச்சைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

களுபோவில வைத்தியசாலையின் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக 160 கட்டில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனினும், சுமார் 250 கொரோனோ நோயாளர்கள் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஐ.டி.எச்யும் நிரம்பியுள்ளது. அங்கு சுமார் 200 கட்டில்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அவை அனைத்திலும் நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே சுகாதார தரப்பினர் மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளனர்.

# கர்ப்பிணிகள் வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதி

இதுதொடர்பில் சுற்றறிக்கையை, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு விரைவில் அனுப்பிவைக்கும் என்றார்.

ஏனைய அரச பணியாளர்கள் கிழமைக்கு இரண்டு கட்டங்களாக பணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அரச பணியாளர்கள் அனைவரும், ஓகஸ்ட் 2ஆம் திகதி முதல் கடமைகளுக்கு அழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு கடுமையான எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டமை தெரிந்ததே.

# திருவிழாவில் பங்கேற்ற 100 பேருக்கு கொரோனா

அந்தக் கோவிலில், உற்சவம் நடத்துவது தொடர்பாக சுகாதார துறையிடம் அனுமதியைக் கோரியபோது 15 பேருடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உற்சவத்தை நடத்த அனுமதியளிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த அனுமதியை மீறி, கடைசிநாள் உற்சவத்தில் பெரும் திரளான மக்கள் பங்கேற்க கோவில் நிர்வாகம் அனுமதியளித்ததையடுத்து பெரும் திரளான மக்கள் உற்சவத்தில் பங்கு கொண்டுள்ளனர்.

இந்நிலையில், கடந்த 3 தினங்களாக தொடர்ந்து அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், 100 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

# தடுப்பூசியைப் பெறுவதற்கு இலவச பயணச் சேவைகள்

அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் ஜகத் அபேசிங்க, ஊபர் ஸ்ரீ லங்கா மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார்.

மக்களின் உயிரைக் காப்பதற்கு தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டத்தை பலப்படுத்த வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய பிரதமர், தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்கு வருகைத்தருவதற்கு போக்குவரத்து வசதிகளின்றி சிரமப்படும் மக்களுக்கு இலவச போக்குவரத்து சேவையை வழங்குவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

# உரிய அந்தஸ்தை வழங்கவும்

இதனால் தமிழ்மொழி பேசுபவர்களால் இந்தத் தகவல்களை விளங்கிக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகப் பலர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழ் மொழிக்கும் உரிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், கிழக்கு மாகாணத்தில் முன்னைய ஆளுநர்கள் காலத்தில் தமிழ்மொழி அமலாக்கம் திருப்திகரமான நிலையில் இருந்தது. எனினும், தங்களது நிர்வாக காலத்தில் இந்த விடயத்தில் புறக்கணிப்பு இருப்பது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

எனவே, இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்தி, கிழக்கு மாகாண உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தமிழ் மொழிக்கும் உரிய அந்தஸ்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் எனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுக்கடங்காது கொரோனா சென்றுவிட்டது

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துக்கொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், டெல்டா வகைக் கொரோனா வைரஸ் நாட்டில் வேகமாகப் பரவி வருகிறது. ஐரோப்பா முழுவதும் பரவியுள்ளது. ‘அஸ்ட்ரா செனெகா’ நூற்றுக்கு 60 அல்லது 65 சதவீதமே பாதுகாப்பளிக்கும். பைஸர் தடுப்பூசி இதனை விட குறைவு என்றார்.

நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுகிறது. இது ஆரம்பம் மட்டுமேயாகும். இந்த வைரஸ் எவ்வாறு பரவுமென எவருக்கும் தெரியாது. கொரோனா வைரஸை கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு சென்றுள்ளது என்றார்.

கொரோனா வைரஸ் தொடர்பான ஜனாதிபதி செயலணி இருக்கும் வரையிலும் கொரோனா வைரஸை வேடிக்கை மட்டுமே பார்க்க முடியும். மக்கள் உயிரிழப்பாளர்கள். எனவே, அதனை கலைத்துவிட்டு, கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளை அமைச்சரவைக்கு வழங்கி, விசேட குழுவொன்றை நியமிக்க வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார்.

# எதிர்க்கட்சித் தலைவரை தடுத்தமை சிறப்புரிமையை மீறும் செயலாகும்

துறைமுக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களைப் பார்வையிட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சென்றார். எனினும், அங்கு அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பொலிஸ் காவல் கூண்டுகளில் அடைக்கப்பட்டுள்ள அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரைச் சந்திக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

எனினும், இந்தச் சம்பவமானது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்பு சலுகையை மீறும் செயல் என்பதுடன், அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் செயலாகும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டு. மாநகர சபையில் கண்டனம்

மட்டக்களப்பு மாநகர சபையின் 5ஆவது அமர்வு, மேயர் தி.சரவணபவன் தலைமையில் நேற்று (05) நடைபெற்றது.

வழமையான சம்பிரதாயங்களுடன் ஆரம்பமான சபை அமர்வின்போது, கடந்த அமர்வின் கூட்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அனுமதிபெற்றப்பட்டதுடன், மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கான சபை அனுமதியும் பெறப்பட்டது.

# மலையக மக்களுக்கு செந்தில் அறிவுரை

“கொவிட் தடுப்பூசிகளை செலுத்தப்பட்டிருந்தாலும் சுகாதார வழிகாட்டல்களை இறுக்கமாக பின்பற்றி அனைவரும் பாதுகாப்பாக இருக்கவேண்டும்” என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொவிட் வைரஸ் தொற்று நெருக்கடியால் கடந்த 2019ஆம் ஆண்டு இறுதி முதல் நாடுகளும் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளன. இலங்கையும் கொவிட் நெருக்கடியால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. கொவிட் -19 வைரஸை விட டெல்டா வைரஸின் வீரியமானது அதிகமாக உள்ளது. இதனால் உயிரிழப்பு அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் இயங்கும் நோய்க்கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான அமெரிக்க மையம் நடத்தயிருந்த ஆய்வில், தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு செலுத்திக்கொள்ளாதவர்களுக்கும் டெல்டா வைரஸானது சிக்கன் பாக்ஸை போன்று (சின்னம்மை) பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

# சபைக்கு அறிவித்தார் ரிஷாட்

அவரது இழப்பு மனவேதனையை தருகிறது. புற்றுநோயால் எனது தங்கை மரணமடைந்த போது, எவ்வாறு துன்பப்பட்டோமே, அவ்வாறான துன்ப, வேதனையை நாம் அனுபவிக்கிறோம் என் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன் தெரிவித்தார்.

ஹிஷாலியின் தாயாரும் அவரது குடும்பத்தாரும் தவறாக வழிநடத்தப்படுகின்றனர். தனது வீட்டில் ஹிஷாலியின் துன்புறுத்தப்பட்டதாகவும், நாய் கூடு போன்ற ஓர் அறையில் அடைத்து வைக்கப்பட்டதாகவும், ஹிஷாலியின் தாயார் முன்வைக்கும் அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் ரிஷாட் மறுத்திருந்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

எனது வீட்டில் தீப்பற்றி எரிந்து உயிரிழந்த ‘தங்கை’யின் மரணம் தனக்கும் தனது குடும்பத்தாருக்கும் பெரும் மன வேதனையளித்திருக்கிறது. எனது சகோதரி புற்றுநோயால் உயிரிழந்தபோது எனக்கும் எனது குடும்பத்துக்கும் ஏற்பட்ட அதே வேதனை தற்போது ஏற்பட்டுள்ளது என்றார்.

16 வயது பூர்த்தியடைந்த பின்னரே தரகர் ஊடாக எனது வீட்டுக்கு அந்த பிள்ளை வேலைக்கு வந்தார். பிள்ளையின் தங்குமிடம் தொடர்பிலோ அல்லது அவர் எங்கு வேலை செய்கிறார் என்பதுத் தொடர்பில் பிள்ளையின் பெற்றோர் வந்து பார்க்கவில்லை.

எனினும், அவர் தங்குவதற்கு 7x6 என்கிற அளவிலான சாதாரணமாக ஒருவர் தங்கக்கூடிய அறை ஒன்றையும், அதனுடன் இணைந்த மலசலகூடத்தையும் அவரின் பாவனைக்காக வழங்கியிருக்கிறோம் என்றார்.

கடந்த 10 வருடங்களாக எனது வீட்டில் வேலை செய்துவந்தவர்கள் அங்கே தங்கியிருந்தார்கள். காலை 6.45 மணியளவில் ஹிஷாலியின் சத்தம் கேட்டு தூக்கத்தில் இருந்த எனது மாமியும் மாமனாரும் எழும்பி வந்து பார்த்துள்ளனர். வயதான அவர்கள் அங்கிருந்த காபட்டை போட்டு தீயைக் அணைக்க பெரும் முயற்சி செய்தனர்.

அருகே இருந்த தண்ணீர் தடாகத்தில் பாயும்மாறும் கூறியுள்ளனர். அப்போது, ஹிஷாலி குடிப்பதற்கு கூல் தண்ணீரைக் கேட்டுள்ளார். அதனையும் அவ்விருவரும் வழங்கியுள்ளனர். அணைப்பதற்காக 10 - 15 நிமிடங்கள் சென்றுள்ளன. 7.33 மணிக்கே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றார்.

எனினும் பொலிஸார் 8.35 மணிக்கே அவரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என நீதிமன்றில் தெரிவித்துள்ளார்கள். எனது குடும்பத்தாருக்கு இதுபோன்ற சம்பவங்கள் நடந்தால் எப்படி நடந்துக்கொள்வோமோ அதிலிருந்து ஓர் அணுவளவும் குறையாது, இந்த விடயத்திலும் எனது மாமனாரும் மாமியும் செயற்பட்டுள்ளனர்.

பின்னர் விடயம் அறிந்த மனைவி வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். வைத்தியசாலைக்கு வைத்தியர்களும் பிள்ளையைக் காப்பாற்ற பெரும் முயற்சி எடுத்தனர். எனது பிள்ளைகள், மனைவி உள்ளிட்ட அனைவரும் ஹிஷாலினி உயிர் பிழைக்க வேண்டுமென நோன்பு நோற்றார்கள் என்றார்.

# கண்களுக்கு முன்பாக மயங்கி விழுந்து இருவர் மரணித்தனர்

தன்னுடைய தாய் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். அவரை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக, நீண்ட வரிசையில் நிற்கின்றேன்.

என்னுடைய கண்களுக்கு முன்பாக இருவர் மரணமடைந்துவிட்டனர். இன்னும் சிலர் திடீரென மயக்கமடைந்து கீழே விழுவதையும் அவதானித்தேன்.

ஊடகவியலாளர் திலக்ஷனி மதுவத்த சிங்கள மொழியில் எழுத்தியிருப்பதை மொழிப்பெயர்த்து தருகின்றோம்.

இந்தியாவில் கொரோனாவின் கோரத்தாண்டவம் தொடர்பில் வாசித்ததை இன்று நான் நேரில் கண்டேன்.

தற்போது நேரம் அதிகாலை 1 மணி 20 நிமிடம் (இன்று அதிகாலையில் எழுதியது)

இது களுபோவில கொவிட் விடுதி

விடுதியில் இருக்கும் ஒவ்வொரு கட்டில்களிலும் இரண்டு அல்லது மூன்று தொற்றாளர்கள்.

அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நோயாளர்கள்.

அந்த விடுதியின் தரையில் படுத்திருந்தவாறு, கட்டில்களுக்கு கீழே படுத்திருந்தவாறு ஒட்சிசன் பெற்றுக்கொண்டு, உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இன்னும் சிலர் போராடுகின்றனர்.

ஓர் அடிகூட நகர முடியாத அளவுக்கு பயமாக இருக்கிறது. அந்தளவுக்கு தொற்றாளர்கள் படுத்திருக்கின்றனர்.

ஏனைய சகல தொற்றாளர்களும் (100க்கும் மேற்பட்டவர்கள்) திறந்த வெளியில், நீண்ட வாங்குகளில், கதிரைகளில், மரங்களின் கீழே அமர்ந்திருக்கின்றனர்; அல்லது படுத்திருக்கின்றனர்.

மற்றவர்கள் மணல் தரையில் ஒரு போர்வையுடன் அல்லது இல்லாமல் இருக்கின்றனர்.

இந்த அதிகாலையில், அனுமதிக்கப்படவேண்டிய வரிசை மிகவும் நீளமானது.

கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் தேடி பெற்றுக்கொண்ட கதிரையில் அம்மாவை அமரச் செய்துவிட்டு, ஒரு கற்சுவரில் ஏறி அவர்களைக் கவனித்தேன்.

குளிரில், நுளம்புகளை அடித்துக்கொண்டு அல்லது விரட்டிக்கொண்டு அங்கிருந்த அனைவரும் கொரோனாவுடன் போராடுகின்றனர்.

எனது கண் முன்பாக சில மணிநேரத்துக்குள் இருவர் மரணித்துவிட்டனர்.

சிலர் மயக்கமடைந்து கீழே விழுகின்றனர்.

வைத்தியசாலையின் பணியாள் தொகுதியினர் மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் உள்ளனர்.

அவர்கள் ஒரு தெய்வத்தைப் போல கடினமாக உழைக்கிறார்கள்.

என்னுடை அம்மா இவ்வாறு கொரோனவுடன் போராடிக்கொண்டிருக்கும் நிலையில், என்னுடைய தந்தை பல நாள்களாக ஒட்சிசன் இயந்திரத்துடன் வாழ்க்கை கொடுத்துவிட்டு பார்த்து கொண்டிருக்கின்றேன்.

இந்த வாழ்க்கைக்குள் இதனைவிடவும் அனுபவிப்பதற்கு துன்பம் இல்லை.

மேலும் உதவியற்ற நிலை.

நாளை நானும் தொற்றாளராக ஆகலாம்.

என்னால் ஒன்றை மட்டுமே கூறமுடியும்.

கொரோனாவை குறைத்து மதிப்பிடாதீர்கள்

முடிந்தளவு பாதுகாப்பாக இருங்கள்.

குடுபத்தினர் அனைவரும் பாதுகாப்பாக இருங்கள்.

இந்தியா தொடர்பில் நான் வாசித்தவை, என் கண் முன்னே, என் நாட்டில் நடக்கிறது.

கவனமாக இருங்கள்.

மிகவும் கவனமாக இருங்கள்.

# மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு

இதையடுத்து, ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், குறித்த எச்சங்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி பார்வையிட்ட பின்னர் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

போர் காலத்தில் உயிரிழந்தவரின் சடலமாக இது இருக்கலாமென, பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# “உயிரோடு இருக்கும் நோயாளி இறந்தவரை விட குணமடைய அதிக வாய்ப்புள்ளது”

“உயிரோடு இருக்கும் நோயாளி இறந்தவரை விட குணமடைய அதிக வாய்ப்புள்ளது” என்றும் தங்களுடைய அறிக்கையில் அவ்விருவரும் குறிப்பிட்டுள்ளனர்.

கொரோனா வைரஸின் டெல்டா திரிபின் பெருக்கத்தால், நம் நாட்டில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது மற்றும் இது குறிப்பாக ஆபத்தானது, ஏனெனில் ஒக்சிசன் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை கடுமையாக அதிகரித்துள்ளது.

இந்த சூழ்நிலையில், அத்தகைய நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் அதிகபட்ச திறனை நாங்கள் ஏற்கெனவே அடைந்துவிட்டோம். இது மென்மேலும் வளர, வளர மிகவும் ஆபத்தான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்றும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தால், சிகிச்சைக்கான அதிகபட்ச திறனும் சில நாள்களில் அதிகமாகிவிடும் என்பது மிகவும் தெளிவாக உள்ளது. ஒக்சிசன் பற்றாக்குறையால் மட்டுமல்ல, நோயாளிகளுக்கு கிடைக்கும் வசதிகளை மீறுவதால் இறப்பு எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இது அரச மற்றும் தனியார் துறை வைத்தியசாலைகளை பாதிக்கும்.

இத்தகைய சூழ்நிலையில், நாட்டில் போக்குவரத்து கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவது, ‘எரியும் நெருப்பில் வைக்கோலை போடுவதற்கு’ ஒப்பாகும். எனவே, கட்டுப்பாடுகளை தளர்த்துவது அரசாங்கத்தின் வரப்பிரசாதமாக கருதலாம். ஆனால், இந்த நெருக்கடி அதிகரிக்கும் வாய்ப்பை சந்தேகமின்றி இது பெரிதும் அதிகரிக்கும்.

அனுபவம் வாய்ந்த மற்றும் பொறுப்பான மருத்துவ அமைப்பாக, நாம் இருக்கும் இந்த ஆபத்தான சூழ்நிலையை, அத்தகைய முடிவுகளை எடுக்கும் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டுவது நமது கடமையாக பார்க்கிறோம்.

தடுப்பூசி திட்டம் எதிர்பார்த்த புள்ளிவிவர இலக்குகளை அடையும் போது இந்த பயண விதிகளை தளர்த்த வேண்டும் என்பதே எங்களுடைய பார்வையாகும். ஒரு நாளைக்கு நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதையும் காட்டுகிறது. இந்த காலம் இன்னும் நான்கு அல்லது எட்டு வாரங்கள் இருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும் நேரத்தில், அதை விரைவில் புதுப்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில்

# தாதியர் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுப்பு



நாடளாவிய ரீதியில் சுமார் 600 வைத்தியசாலைகளில் நேற்று (05) காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை வேலை நிறுத்தப் போராட்டத்தை தாதியர் முன்னெடுத்திருந்தனர்.

எனினும், சிறுவர் வைத்தியசாலை, மகப்பேற்று வைத்திசாலை, புற்றுநோய் வைத்தியசாலை ஆகியனவற்றில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவில்லை.

அத்துடன், கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளில் ஆர்ப்பாட்டங்கள் மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன், வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அனைத்து சுகாதார ஊழியர்களையும் கட்டாயமாக பணிக்கு அழைப்பது தொடர்பாக அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, குறித்த போராட்டத்தை முன்னெடுத்ததாக, மேற்படி சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

"தற்போதைய கொரோனா நிலைமையில் அனைத்து ஊழியர்களும் பணிகளில் இருப்பது ஆபத்தானது. சுகாதார அமைச்சுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினோம். ஆனால், தீர்வுகளை முன்வைக்காத காரணத்தாலேயே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

10 மாவட்டங்களில் டெங்கு அபாயம்:

# காய்ச்சல் நீடித்தால் வைத்தியரை நாடவும்

நாட்டில் டெங்கு அபாயம்மிக்க மாவட்டங்களாக 10 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை, இரண்டு நாள்களுக்கும் மேலாக காய்ச்சல் இருந்தால் உடனடியாக வைத்திய ஆலோசனையை நாடுமாறு, பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் கேட்டுள்ளார்.





டெங்கு உயிர்கொல்லி நோய் என்பதால், அந்தக் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் அவதானமாக இருக்க வேண்டும். இதனால் தாமதிக்காது வைத்தியரை நாடுவது சிறந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, குருநாகல், இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை ஆகிய 10 மாவட்டங்களுக்கே, டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என தேசிய டெங்கு ஒழிப்பு பணியகத்தின் சமூக வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய வானிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுனார்.

ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 10,030 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகளவானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



# நல்லூர் உற்சவத்தில் 100 பேருக்கு அனுமதி

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை 100 பேருடன் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம், எதிர்வரும் 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.


சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள கோவில்களுக்கான சுகாதார வழிகாட்டலின் படி, 100 பேருடன் மாத்திரம் திருவிழா நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக, யாழ். மாவட்டச் செயலர் க. மகேசன் தெரிவித்தார்.

இதனால் இந்த வருட கோவில் உற்சவத்தை சிறப்பாக நடத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும், அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கலைஞர் கருணாநிதியின்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

■ நிலமேகம் பிரசாந்த்



முத்தமிழ் அறிஞர் டொக்டர் கருணாநிதியின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி, கொழும்பு பிரைட்டன் ஹோட்டலில் நாளை சனிக்கிழமை (07) நடைபெறவுள்ளது.

முத்தமிழ் அறிஞர் டொக்டர் கலைஞர் நினைவாலயத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தலைமை தாங்குகின்றார்.

இந்நிகழ்வில் கலைஞர் கருணாநிதி தொடர்பிலான பல விடயங்கள் நினைவுக்கூரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'குமுதினி'யை திருத்த டக்ளஸ் நடவடிக்கை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக பழுதடைந்த நிலையில் சேவையை முன்னெடுக்க முடியாது தரித்து நிற்கும் 'குமுதினி' படகை, மீள் திருத்தம் செய்து, விரைவில் சேவையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவுக்கு, நேற்று முன்தினம் (04) விஜயம் மேற்கொண்ட வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் கமலேந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் முக்கியஸ்தர்கள், குறித்த பிரதேசத்தில் உள்ள சமூகமட்ட அமைப்புகள், பொதுமக்களைச் சந்தித்து பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தனர்.

இதன்போதே, கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக பழுதடைந்த நிலையில் சேவையை முன்னெடுக்க முடியாது தரித்து நிற்கும் குமுதினி படகை, மீள் திருத்தம் செய்து தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த பிரதிநிதிகளூடாக கோரிக்கை விடுக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தர்களால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அலைபேசியூடாக தெரியப்படுத்தப்பட்டது.

இதன் போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சஹ்ரானின் சகோதரி உட்பட

62 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

## ஆறு மாதங்களுக்குப் பின்னர் நீதிமன்றம் அழைத்துவரப்பட்டனர்

■ வா. கிருஸ்ணா, கனகராசா சரவணன்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி, சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட வெவ்வேறு 4 வழக்குகளை கொண்ட 62 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் உத்தரவிட்டார்.

இவர்கள் அனைவரும், கொவிட் 19 நிலைமை காரணமாக கடந்த 06 மாதங்களுக்கு மேலாக நீதிமன்றுக்கு அழைத்துவரப்படாத நிலையில் நேற்று (05) பல்வேறு சிறைச்சாலைகளிலிருந்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர்.

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை, நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த 63 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 5 பேர் பிணையிலும், இருவர் வழக்கில் இருந்தும் விடுவிக்கப்பட்ட நிலையில் 56 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 56 பேருடன் குண்டுத் தாக்குதல் தொடர்பாக வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களை கொண்ட சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சியோன் தேவாலய தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஆசாத்தின் தாயார், சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரி பஸ் ஆசனத்தைப் பதிவு செய்தவர்களும் அடங்குகின்றனர்.



பா.நிரோஸ்
ddnirosh@gmail.com



# சப்பாத்தை மறந்தவிட்டு ஜப்பானுக்கு பறந்த வீரர்



ஒலிம்பிக் விளையாட்டுக்கு சென்ற வீரரொருவர் தனது ஸ்பைக் பாதணியை இலங்கையிலேயே வைத்துவிட்டு சென்றுள்ளார் எனத் தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஒலிம்பிக் விளையாட்டில் பங்குபற்றக்கூடிய தகுதியைக் கொண்ட மூவரே இலங்கையிலிருந்து இம்முறை சென்றுள்ளனர் என்றார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வெல்வதற்காக, ஒவ்வொரு நாடுகளும் 10 - 15 வருடங்கள் வரை தயார்படுத்தல்களை மேற்கொள்கின்றன. ஜப்பான் இம்முறை மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. இதற்காக 15 வருடங்களுக்கு முன்பிருந்து அதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தது என்றார்.

இலங்கையில் இந்த வேலைத்திட்டங்கள் 6 மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்படுகின்றது. எனினும், 2031ஆம் ஆண்டுவரையில் இதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

அரசாங்கமோ அல்லது விளையாட்டுத் துறை அமைச்சரோ ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்கு வீரர்களை தெரிவு செய்வதில்லை. IFF இனால் அனுதிக்கப்பட்ட விளையாட்டுகளில், சர்வதேச மட்டத்தில் தனது நேரங்களை எடுத்துச் செல்லக்கூடிய வீரர்களே தெரிவு செய்யப்படுவார்கள் என்றார்.

கொரோனாவின் உண்மையான

# தரவுகளை அரசாங்கம் மறைக்கிறது



கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான உண்மையான தகவல்கள் வெளிவரும்போது, புதிய ஒழுங்கு விதிகளை அமல்படுத்தி உண்மையான தகவல்களை அரசாங்கம் மறைப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் குற்றஞ்சுமத்தினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், சட்டதிட்டங்களை அமல்படுத்தி கொரோனா வைரஸ் தொடர்பான சட்டதிட்டங்களை மறைக்க வேண்டாம் எனவும், நாடு முகங்கொடுத்திருக்கும் இவ்வாறான நிலைமையில் நாட்டு மக்களுக்கு உண்மையைத் தெரியப்படுத்த வேண்டும். அரசாங்கம் இதுபோன்ற நிலைமைகளில் உண்மைகளை மறைப்பது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும செய்யும் தவறு என்றார்.

# ஆசிரியர்களுக்கு மாற்று ஆடையில்லை



பியூமி ஹன்சமாலிக்கு ஆடைகளை வழங்கிய அமைச்சர் சரத் வீரசேகர, கைது செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும் ஆடைகளை வழங்குவரா என வினவிய எதிர்க்கட்சி எம்.பி நளீன் பண்டாரா, 48 மணித்தியாலங்கள் ஒரே ஆடையை உடுத்திக்கொண்டு, அவரது மனைவியால் இருக்க முடியுமா எனவும் வினவினார்.

பாராளுமன்றத்தின் நேற்று உரையாற்றிய அவர், 'நாசமாய் போனவர்கள்' என ஆசிரியர்களைத் திட்டும் அமைச்சர்களே, இந்த அரசாங்கத்தில் இருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள், மாற்று ஆடைகள் இன்றி இருக்கிறார்கள். பியூமி ஹன்சமாலியை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அழைத்துச் செல்லும்போது, ஆடைகளை வழங்கிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, இப்போது ஆசிரியர்களுக்கும் ஆடைகளை வழங்குவாரா? ஆசிரியர்களுக்கு மாற்றுவதற்கு உடைகள் இல்லை. மாற்று ஆடைகளை வழங்குவதற்காகவே நாம் இன்று (05) அங்கு சென்றிருந்தோம். ஆனால் எங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

# தொற்றாளர்கள் அதிகரித்துவிட்டனர்

## சபையில் போட்டுடைத்தார் ஆளுங்கட்சி எம்.பி



கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவித்த ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பைஸர் தடுப்பூசியை செலுத்திக்கொண்டுள்ளார் என்றார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தொற்று மென்மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்கு, தடுப்பூசியை செலுத்துக்கொள்வதே ஒரே தீர்வு. இதனை ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசாங்கம் சிறப்பாக செய்து வருகிறது என்றார்.

# கல்வியை இராணுவ மயமாக்க வேண்டுமா?



ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம், நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதோடு, நாட்டிலுள்ள கற்றவர்கள், புத்திஜீவிகள் இதனை எதிர்த்து வருவதையும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் சபையில் சுட்டிக்காட்டினர்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாக்களை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டில் பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஒன்று தேவை. ஆனால், கல்வியை இராணுவ மயமாக்கும் செயற்பாடுகள் அவசியமா எனவும் வினவிய அவர், பேராசியராக உள்ள கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் போன்றவர்கள் கூட, இதனை ஆதரிக்க வேண்டுமா எனவும் வினவினார்.

# நாட்டில் கொரோனா அதிகரித்துள்ளது



நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ளதாக சபைக்கு அறிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, மற்றொரு கொரோனா வைரஸ் அலை நாட்டில் உருவாகுமா என்பதை உறுதியாகக் கூற முடியாது என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்னாசியாவில் கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருகிறது. இதன்படி இலங்கையிலும் கடந்த வாரத்தில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ளது. இதன்படி இதற்கு முன்னர் நாளொன்றுக்கு 1,000 - 1,500 தொற்றாளர்கள் பதிவாகினர். கடந்த வாரம் முதல் நாட்டில் நாளொன்றுக்கு 2,000 - 2,500 வரையிலான தொற்றாளர்கள் பதிவாகிவருகின்றனர் என்றார்.

30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 86 சதவீதமானருக்கு இதுவரையில் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசிகள் செலுத்தப்படும். நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் அலை ஒன்று ஏற்படுமா என்பது தொடர்பில் உறுதியாகக் கூற முடியாது என்றார்.

கடந்த 10 நாள்களில், 21 ஆயிரத்து 344 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 10 நாள்களில் 591 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தொற்றுக்குள்ளாகி பாரதூரமான நிலையில் சிகிச்சைப் பெற்றுவரும் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் மாறி வருகின்றது என்றார்.

# பவுனின் பெறுமதியை ஆசிரியர்களுக்கு வழங்குக



தங்கப்பவுன் ஒன்றின் விலை இலங்கையில் என்னவோ, அந்தப் பெறுமதியே ஓர் ஆசிரியரின் அடிப்படைச் சம்பளமாக அமைய வேண்டும் என்கிற யோசனையை ஒன்றை முன்வைப்பதாகத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.பியான எஸ். ஸ்ரீதரன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலினுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால், அரசாங்கமே அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்றார். பாராளுமன்றத்தின் நேற்றைய (05) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் பல நாள்களாகப் போராடி வருகின்றனர். இந்த அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் பீரிஸால் அமைக்கப்பட்ட சுபோதினி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு கோரியே ஆசிரியர்கள் போராடுகின்றனர் என்றார்.

# பிரதி அதிபருக்கும் தவிசாளருக்கும் அழைப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்





கிளிநொச்சி, முழங்காவில் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபரும் பூநகரி பிரதேச சபை உறுப்பினருமான சி.சிறிரஞ்சனை ஞாயிற்றுக்கிழமை (08), கிளிநொச்சி பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவுக்கு சமூகமளிக்குமாறு, பொலிஸாரால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனையும், நாளை (07) கிளிநொச்சி பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவுக்கு சமூகமளிக்குமாறு பொலிஸாரால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபையின் உறுப்பினர்கள் பலரும் கொழும்பு, 4ஆம் மாடியிலும் கிளிநொச்சியிலும் அமைந்துள்ள பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின் அலுவலகங்களுக்கு விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டு நீண்டநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில், பச்சிலைப்பள்ளி சபை தவிசாளருக்கும் விசாரணைக்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது







2ஆவது டோஸுக்காக வந்த

# வயோதிபர்கள் அலைக்கழிப்பு

## இராணுவத்தின் மீது பழிபோடும் சுகாதார அதிகாரிகள்

■ மு. தமிழ்ச்செல்வன், செ. கீதாஞ்சன்

கிளிநொச்சியில், கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது தடுப்பூசியை செலுத்த சென்ற வயோதிபர்கள், நேற்று (05) திருப்பி அனுப்பட்டுள்ளனர்.

ஜுலை 06ஆம் திகதியும் அதனை அண்மித்த சில நாள்களிலும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதலாவது சினோர்ஃபாம் தடுப்பூசி செலுத்தப்பட்டது. இதன்போது இரண்டாவது தடுப்பூசிக்கான திகதி, ஒகஸ்ட் 5ஆம் திகதி என குறிப்பிடப்பட்டது.

இந்நிலையில், 60 வயதுக்கு மேற்பட்ட முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட வயோதிபர்கள், இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்காக, கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு, நேற்றைய தினம் காலை 6 மணிக்கு, நூற்றுக்கணக்கான வயோதிபர்கள் சென்றிருந்தனர்.

சுமார் காலை 9 மணி வரை காத்திருந்த வயோதிபர்களுக்கு, தடுப்பூசி செலுத்துவதற்கான எவ்வித ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் அறிந்த இராணுவத்தினர், சம்பவ இடத்துக்குச் சென்று 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இரண்டாவது தடுப்பூசி, சனிக்கிழமையின் (07) பின்னர் கிடைக்க கூடிய வாய்ப்புகள் உள்ளதாகவும் எனவே இது தொடர்பான அறிவித்தல் சுகாதார துறையினரால் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்து, வயோதிபர்களை திருப்பி அனுப்பினர்.

இந்நிலையில், இது தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார பிரிவு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வினவிய போது, இச்சம்பவம் தொடர்பில் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று பதிலளித்தனர்.

அத்துடன், "முதலாவது தடுப்பூசியை 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இராணுவத்தினரே செலுத்தினார்கள். எனவே, அவர்களே இவர்களுக்குப் பதிலளிக்க வேண்டும்" என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தால் வயோதிப நிலையிலும் தூர இடங்களிலிருந்து வருகை தந்தவர்கள், கடும் சிரமங்களுக்கு மத்தியில் திரும்பிச் சென்றனர்.

தங்களுக்கு முறையான அறிவித்தல்களை வழங்கியிருந்தால், கொரோனா பரவல் நெருக்கடிக்கு மத்தியிலும் வீண் அலைச்சல் இருந்திருக்காது எனத் தெரிவித்தனர்.

# போலி நாணயத்தாள்களுடன் பெண் கைது

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட சுதந்திரபுரம், கொலனி பகுதியில், போலி நாணய தாள்களை வைத்திருந்த 41 வயதான பெண் ஒருவர், நேற்று (05) காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து, 500 ரூபாய் போலி நாணயத் தாள்கள் 17 மீட்கப்பட்டுள்ளன என, புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய பெண் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணை காணவில்லை

■ செ. கீதாஞ்சன்



விசுவமடு மேற்கு, அதிசய விநாயகர் கோவிலடி பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் கருணாவதி என்ற பெண் காணாமல் போயுள்ளார்.

ஒகஸ்ட் 2ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ள இவர், மனநிலை பாதிக்கப்பட்டவர் என, உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர் தொடர்பில் தகவல் அறிவோர், தவச்செல்வன் (சின்னவன்) 077-6793075 / 077-6463254 என்ற அலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு தெரியப்படுத்துமாறு, உறவினர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மன்னாரில்

# மீண்டும் தலைதூக்கும் கொரோனா

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தை அனைத்து தரப்பினருடைய ஒத்துழைப்போடும் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த போதும், ஒரு சில நாள்களில் மாவட்டத்தில் கொரோனா தொற்று வேகமாக அதிகரித்துள்ளதாக, மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில், கொரோனா தொற்று தொடர்பாக அதிகாரிகளுடன், நேற்று (05) காலை 10 மணியளவில், மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் வைத்து, அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதலைக் கடைப்பிடிப்பதில் இருந்து தவறி உள்ளார்களா என்று சந்தேகம் ஏற்பட்டுள்தாகத் தெரிவித்தார்.

துறை சார் திணைக்கள தலைவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமெனத் தெரிவித்த அவர், குறிப்பாக மக்கள் பொது இடங்களில் எச்சில் துப்புதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டுமெனவும் கூறினார்.

அதிக எண்ணிக்கையாக பயணிகளை ஏற்றும் பஸ் சாரதி, நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு பணித்துள்ளோம்.

அத்துடன், பொதுமக்கள் அதிகாரிகளுடன் முரண்படுகிற நிலையும் ஏற்படுகிறது. எனினும், அதைப் பொறுத்துக் கொண்டு அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்றும், மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

யோகட், தேயிலை வாங்கியா

# பால்மா வாங்க வேண்டும்?

## நுகர்வோர் விசனம்

■ கனகராசா சரவணன், ஏ.எச்.ஏ. ஹுஸைன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக சிறிய அளவில் இருந்து வந்த பால்மாவுக்கான தட்டுப்பாடு, தற்பொழுது முற்றுமுழுதான தட்டுப்பாட்டு நிலைமைக்கு வந்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்திலுள்ள மொத்த வியாபார நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள், சிறிய கடைகள் உட்பட அனைத்து வியாபார நிலையங்களிலும் முழு ஆடைப்பால் மா வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனினும், ஒரு சில வர்த்தக நிலையங்களில், பால்மா தயாரிப்பு நிறுவனங்களின் தயாரிப்புகளான யோகட், தேயிலை வாங்கினால் அந்த நிறுவனங்களின் பால்மா வகைகளை வாங்கக் கூடியதாக உள்ளது எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து பால்மா விநியோகிக்கும் கம்பனிகள் பால்மா வரவில்லை எனத் தெரிவித்து, பால்மா விநியோகத்தை நிறுத்தியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இருந்த போதிலும் சில நிபந்தனைகளுடன் சில பால்மாக்களை விநியோகிப்பதாக அந்தக் கம்பனிகள், வர்த்தகர்களிடம் தெரிவித்திருந்தபோதும் தாம் அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

பால்மா விநியோகிக்கும் ஒரு சில கம்பனிகள், தமது வேறு தயாரிப்புகளையும் பால்மாவுடன் சேர்த்து விற்குமாறும் அதன்போதே பால்மாவை வழங்குமாறும் கேட்டுள்ளன என்றும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, பால்மா விநியோகிக்கும் கம்பனியின் யோகட், தேயிலை போன்றவற்றை வாங்கினால், கூடவே பால் மாவை வாங்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் பால் மாவை வாங்கிப் பருக முடியாது பொதுமக்கள் பெரிதும் விசனம் தெரிவிக்கின்றனர்.




இலவச கல்வியில் தலையீடு:

# கண்டன பேரணி முன்னெடுப்பு

■ வா.கிருஸ்ணா

கொத்தலாவல பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இலவச கல்வியில் இராணுவத்தின் தலையீட்டைக் கண்டித்தும் மட்டக்களப்பில், நேற்று (05) பேரணி நடைபெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், சிவில் சமூக அமைப்புகள் இணைந்து இந்தப் பேரணியை முன்னெடுத்தன.

மட்டக்களப்பு, கல்லடி பாலத்துக்கு அருகிலிருந்து கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடம் வரையில் கண்டன இப்பேரணி சென்றது.

'கல்வியை இராணுவ மயப்படுத்தும் கொத்தலாவ சட்டத்தை முறியடிப்போம்', 'கொத்தலாவ பாதுகாப்புச் சட்ட மூலத்தை அமல்படுத்தாதே', 'கல்வியை இராணுவ மயப்படுத்தாதே' போன்ற கோஷங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை பேரணியில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடத்திற்கு முன்பாக நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின்போது, கொத்தலாவல பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிராக பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த போராட்டத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், சர்வமத ஒன்றிய பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

சிறிமா ஆட்சி கவிழ்ந்ததை

# தற்போதைய அரசாங்கம் மறந்து விட்டதா?

■ அஸ்லம் எஸ்.மௌலானா



சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில், ஆசிரியர்களின் போராட்டத்தை, குதிரைப் படை வீரர்களைக் கொண்டு அடக்க முயற்சித்ததன் விளைவாக, 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அவரது கட்சி படுதோல்வி அடைந்து, எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைக் கூட இழந்த வரலாற்றை தற்போதைய ஆட்சியாளர்கள் மறந்து விடக் கூடாது என, இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கச் செயலாளர் ஏ.எல்.முஹம்மத் முக்தார் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர், நேற்று (05) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:

"அரச துறையில் மிகக் கூடிய எண்ணிக்கையானோர் ஆசிரியர்களாவர். பாடசாலைகளில் கல்வி கற்கும் சுமார் 46 இலட்சம் மாணவர்களின் தலைவிதி இவ்வாசிரியர்களிடமே உள்ளது. ஓர் ஆசிரியர் பெறுகின்ற 35,000 முதல் 45,000 ரூபாய் வரையான சம்பளத்தின் மூலம் அன்றாட செலவைக் கூட ஈடுசெய்ய முடியாது அந்தரப்படுகின்றனர்.


ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை தட்டிக்கழிக்கும் விதத்தில், நையாண்டி பண்ணும் விதத்தில் அமைச்சர்கள் சிலர் செயற்படுவது ஏற்புடையதல்ல" என்றார்.

புதையல் தங்கமெனக் கூறி

# மின்னும் உலோகத்தை விற்க முற்பட்ட நபர்

## புலனாய்வுப் பிரிவினரால் கைது

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்



புதையலில் கிடைத்த தங்கமெனக் கூறி, போலித் தங்கத்தை 20 இலட்சம் ரூபாய்க்கு விற்க முற்பட்ட ஒருவர், புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சம்பவம், அம்பாறை - சங்கமன்கண்டிப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் (04) மாலை இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் சங்கமன்கண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புதையலில் கிடைத்த தங்கமெனக் கூறி, போலித் தங்கத்தை விற்பனை செய்வதாகக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து, அக்கரைப்பற்று பொலிஸ் விசேட புலனாய்வுப் பொலிஸார், சம்பந்தப்பட்ட நபருடன் தங்க கொள்வனவாளர் போன்று தொடர்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இதன்போது, தன்னிடம் உள்ள புதையல் தங்கத்துக்கு ரூபாய் 20 இலட்சம் வழங்குமாறு, அந்நபர் கோரியுள்ளார்.

அதற்கு சம்மதித்த பொலிஸ் விஷேட புலனாய்வுப் பொலிஸார், சங்கமன்கண்டியிலுள்ள குறிப்பிடப்பட்ட இடத்துக்குச் சென்று, இந்த நபரைக் கைது செய்துள்ளனர்.

இதன்போது, சம்பந்தப்பட்ட நபரால் புதையல் தங்கமெனக் கூறப்பட்ட தங்கக் கட்டிகள் போன்று மின்னும் உலோகத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

இது விடயமாக தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் விசேட புலனாய்வுப் பொலிஸார், கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் ஆஜராக்கவுள்ளதாகத் தெரிவித்தனர்.

# யானை தாக்கி விவசாயி மரணம்

## அறுவடை முடித்து செல்கையில் பரிதாபம்

■ எச்.எம்.எம்.பர்ஸான், எம்.எம். அஹமட் அனாம்



யானை தாக்கியதில், வாகனேரி, பொட்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய சின்னத்தம்பி வேலுப்பிள்ளை எனும் விவசாயி உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்தானை, கல்கணி எனும் இடத்தில் வைத்தே இச்சம்பவம், நேற்று முன்தினம் (04) மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வேளாண்மை அறுவடையை முடித்துக் கொண்டு, சைக்கிளில் தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த விவசாயியே இவ்வாறு கடுமையான முறையில் யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

சம்வம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சடலம், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாள்களாக

# சீதாவக்க ஆற்றில் எண்ணெய்ப் படலம்


எஸ்.ஆராச்சி

தெரணியகல நகரின் ஊடாகச் செல்லும் சீதாவக்க ஆற்றில் எண்ணெய்ப் படலமொன்று காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மாதம் 3ஆம் திகதி மாலையிலிருந்து இந்த எண்ணெய்ப் படலம் காணப்படுவதாகவும் பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும். இது தொடர்பான எவ்வித தகவல்களும் தமக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கேகாலை மாவட்ட பிரதி பணிப்பாளர் ஆர்.எம்.எஸ்.டி ரத்னாயக்க, இந்த எண்ணெய் படலம் தொடர்பில் தெரணியகல பிரதேச செயலகத்தில் இருந்து தகவல்களைப் பெற்று விசாரணை நடத்தவுள்ளதாகத் தெரிவித்தார்.





## கொரோனா செய்தித் துளிகள்

1. கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில், சிகிச்சை பெற்று வந்த, ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தின் பதிவாளர் உயிரிழந்துள்ளார் என, ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (சுதத்.எச்.எம். ஹேவா)
2. இந்த வருடம் ஜூலை மாதம் 31ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் இரண்டாம் திகதி வரை மாத்தளை-ரத்தோட்டை தொகுதியில் 115 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (மஹேஸ் கீர்த்திரத்ன)
3. கொரோனா சிகிச்சை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த 71 வயதுடைய நபர் ஒருவர், பலாங்கொடை பகுதியில் நினைவிழந்து வீதியில் விழுந்து மரணமடைந்துள்ளார். (ஏ.ஏ.எம். பாயிஸ்)
4. மொனராகல சுகாதார சேவை பிரிவில் நேற்று முன்தினம் (4) புதிதாக 90 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மொனராகலை மாவட்டத்தில் இதுவரை மொத்தமாக 5,505 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். (சுமணசிறி குணதிலக)
5. பசறையில் மேலும் 18 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் அனைவரும் பிந்துனுவெவ, ககாகொல்ல சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (எம். செல்வராஜா)
6. மஸ்கெலியா சுகாதார பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கொரோனா தொற்றால் ஒரே நாளில் மூவர் உயிரிழந்துள்ளனர். இதில் மஸ்கெலியா நகரைச் சேர்ந்த 72, 61 வயதான வர்த்தகர்களும் சாமிமலையைச் சேர்ந்த 86 வயதுடைய பெண்ணொருவருமே உயிரிழந்துள்ளனர். (ஆர். யோகேசன்)



# நேற்றும் வீதிக்கு இறங்கிய ஆசிரியர்கள்

ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடு, இலவச கல்வியை தனியார் மயப்படுத்தல், கொத்தலாவல சட்டமூலத்தை திருத்தம் செய்தல் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, நேற்று (5) ஹட்டன், பதுளை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. (படங்கள்: எம். செல்வராஜா, எம். கிருஸ்ணா, எஸ். கணேசன், எஸ். சதீஸ், உமாமகேஸ்வரி)











ஹட்டனில் ஊதுபத்தி விற்கும் சிறுமிகளை

# வலை விரித்து தேடிய ம. ம. முன்னணி

## சிக்கியவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைப்பு

நீலமேகம் பிரசாந்த், சுந்தரலிங்கம், யோகேசன்

மலையகத்தின் முக்கிய நகரங்களிலுள்ள பஸ்தரிப்பிடங்கள், ரயில் நிலையங்கள் உள்ளிட்ட பகுதிகளில் ஊதுபத்தி விற்பனையில் ஈடுபடும் சிறுமிகளைத் தேடும் விசேட நடவடிக்கையொன்று, மலையக மக்கள் முன்னணியால் நேற்று (5) முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய, நுவரெலியா, ராகலை, தலவாக்கலை, ஹட்டன், மஸ்கெலியா, பொகவந்தலாவ உள்ளிட்ட பிரதான நகரங்களில் விசேட தேடுதல் நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்ததாக, மலையக மக்கள் முன்னணியின் நிதிச்செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்தார்.

இதன்போது, இச்சிறுமிகள் தங்களது குடும்ப வறுமை காரணமாக, பத்தி விற்பனை தொழிலில் ஈடுபடுவதாகவும், தங்கள் குடும்பத்தின் பொருளாதாரத்தை ஈடுசெய்யக்கூடிய உதவிகள் கிடைத்தால், தாங்கள் இதைக் கைவிடுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, சிறுமிகளிடம் இருந்த மொத்த ஊதுபத்திகளும் மலையக மக்கள் முன்னணியின் குழுவினரால் விலைகொடுத்து வாங்கப்பட்டதுடன், அவர்களுக்குத் தேவையான உதவிகளை எதிர்காலத்தில் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அக்குழுவினர் இதன்போது தெரிவித்தனர்.

அத்துடன், இது தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதாகிருஸ்ணனால், பாராளுமன்றத்தில் உரையாற்றப்பட்டதாக சுட்டிக்காட்டிய புஸ்பா விஸ்வநாதன், இராதாகிருஸ்ணனின் வழிகாட்டலுக்கு அமைய, இது தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றார்.





## வீதிகள் ஒளிர்ந்தன...







பி.கேதீஸ்

கொட்டக்கலை பிரதேச சபை உறுப்பினர் ராஜமணி பிரசாந்தின் வேண்டுகோளுக்கிணங்க, கொட்டக்கலை பிரதேச சபை உறுப்பினர் பொன்னையா ரவிச்சந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ், கிரேட்வெஸ்டன் தோட்ட பிரிவுகளான கல்கந்தவத்தை, லூசா, ஸ்கல்பா ஆகிய தோட்டங்களுக்கு வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

அதிக பொருள்களைக் கொள்வனவு செய்தால் மாத்திரமே

# பால்மா கிடைப்பதாக குற்றச்சாட்டு

மெய்யன்

மலையகத்தில் பால்மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

கண்டி, கம்பளை பகுதிகளில் விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச் சொற்பமான கடைகளிலேயே பால்மா கிடைக்கப்பெறுகின்றபோதும், தொடர்ச்சியாக பொருட்களை அதிகமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு மாத்திரம் ஒரு பக்கட் பால்மா விற்கப்படுகின்றது.

குழந்தைகளுக்கான பால்மா சில இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றபோதும் நுகர்வோருக்குத் தேவையான, சில பால்மாக்கள் வியாபார நிலையங்களில் இல்லை என நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, பால்மாவின் விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் பால்மா பக்கட்டுகளை, கடை உரிமையாளர்கள் பதுக்கி வைத்திருப்பதாக நுகர்வோர் குற்றஞ்சுமத்துவதுடன், நுகர்வோர் அதிகார சபை இவ்வாறான நடவடிக்கைகளை சுற்றி வளைப்பின் மூலம் தடுத்து நிறுத்த வேண்டுமென நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சிறுமிக்காக...

டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி, நேற்று (5) மலையகத்தின் பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய தலவாக்கலை- கிரேட்வெஸ்டன் லூசா, நாவலப்பிட்டி – போகில் தோட்ட மக்களால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (கேதீஸ், எம். கிருஸ்ணா)







நுவரெலியா மாவட்டத்தில்

# கால்நடை வளர்ப்பு அருகிவருகிறது

ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த பத்து வருடங்களாக கால்நடைகள் வளர்ப்பு படிப்படியாக அருகி வருகின்றதென கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கால்நடை வளர்ப்புக்கான புற்தரைகள், புற்கள், காலநிலை வளங்கள் காணப்படும் நிலையில், கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு காணப்பட்ட கால் நடை வளர்ப்பு தற்போது, 90 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது நிலவும் பால்மா தட்டுப்பாடு தொடர்பில் இவர்களிடம் வினவியபோது அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் தெரிவிக்கையில்,

2001ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் கால்நடை அமைச்சராக சௌமியமூர்த்தி தொண்டமான் நியமிக்கப்பட்டிருந்த காலத்தில், மத்திய மாகாணத்தில் மாத்தளை, கண்டி, நுவரெலியா மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தி, பால், பால்மா மற்றும் பாலுணவு உற்பத்திகள் என அபிவிருத்தி கண்டிருந்தது.



பெருந்தோட்டப் பகுதிகளிலும் தொழிலாளர் குடும்பங்கள் தமது தோட்ட தொழிலுக்கு அப்பால் கால்நடை வளர்ப்பில் அதிகளவாக ஈடுபட்டு, தமது பொருளாதாரத்தை வளப்படுத்திக்கொண்டனர்.

அத்துடன், மாகாண சபைகளில் விவசாயத்துறை, கால்நடை அபிவிருத்தி துறை அமைச்சு ஊடாக, மத்திய மாகாணத்தில் தோட்ட மற்றும் கிராமப்புற பகுதிகளில் கால்நடை அபிவிருத்திகளை ஊக்குவிக்க நடவடிக்கைகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

இப்போது மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில், மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சு ஊடாக கிடைக்க கூடிய உதவிகளும் சரியாக கால்நடை வளர்ப்பாளர்களுக்கு கிடைப்பதில்லை.

மேலும், தோட்டப்பகுதிகளில் புற்கள் வளர்க்க தரிசுநிலங்கள் வழங்குவதில்லை. பட்டிகள் அமைக்க இடங்களும் வழங்குவதில்லை. இவ்வாறான சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதால், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி பெரும் பாதிப்பை கொண்டுள்ளது

எனவே, சகல வளங்களும் கொண்ட மலையகத்தில் எதிர்வரும் காலங்களில் மாடுகள் வளர்ப்பை ஊக்கப்படுத்தி, பால் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கட்டுப்பாடு தளர்வு; 'எரியும் நெருப்பில் வைக்கோலை போடும் செயல்'

ஒரு துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்கள் கூறுகின்ற ஆலோசனைகளுக்கு செவிசாய்க்கவும் காலவோட்டத்துக்கு ஏற்றவகையில் வழிகாட்டல்களைப் பின்பற்றவும் வேண்டும். ஏனெனில், நிபுணர்கள் கடந்து வந்திருக்கும் பாதை கரடுமுரடானது; நெழிவு சுழிவுகளை நன்கு அறிந்துவைத்திருப்பர்.

நாட்டை முழுமையாக முடக்கி வைத்திருப்பதன் ஊடாக, பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதில் மாற்றுக்கருத்துகளுக்கு இடமேயில்லை, ஆனால், நாட்டை மீளவும் முழு முடக்கத்துக்கு, தளர்வுகளே வழிசமைத்தும் விடக்கூடாது.

கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமை தொடர்பில் இருபக்க நியாயங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், கொரோனா தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் நிரம்பிவழிவதைப் பார்க்குமிடத்து, தளர்த்திய கட்டுப்பாடுகளை மக்கள் கவனயீனமாகக் கையாண்டுள்ளனர் என்பது புலனாகிறது. இதைத்தான், விசேட வைத்திய நிபுணர்கள், 'எரியும் நெருப்பில் வைக்கோலை போடும் செயல்' எனக் கூறியுள்ளனர்.

ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும், கொள்ளளவை விடவும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்துள்ளது; ஒட்சிசன் தேவைப்பாடும் கூடியுள்ளது. இது, மிகவும் ஆபத்தான கட்டமாகுமென நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆகையால், கொவிட்-19 தொற்றொழிப்பு செயலணியின் இன்றைய கூட்டத்தில், மிகக் கவனமாகவும் ஆழமாகவும் ஆராய்ந்து தீர்மானமொன்றை எட்டவேண்டியுள்ளது. மனித உயிர்கள், பொருளாதாரம் இரண்டுக்கும் இடையில், கொரோனா புகுந்து விளையாடிக் கொண்டிருக்கின்றது.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, நோயாளர்களின் தேவைகளும் அதிகரிக்கும். அதனை அதியுச்ச பட்சத்தில் பூர்த்திசெய்ய முடியாவிடின், இறப்புக்கு வழிசமைத்துவிடும். தொற்றாளர்கள் எண்ணிக்கை, இறப்பு வீதம் ஆகியன அதிகரிக்குமாயின், எதிர்பார்த்த பொருளாதார இலக்கையும் எட்டமுடியாது என்பதே உண்மையாகும்.

நாடு இவ்வளவு கடுமையான சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடியில் இருக்கும் நேரத்தில், நடைமுறை மற்றும் அறிவியல் ரீதியான முடிவுகளை எடுப்பது முக்கியம். மக்களின் ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை அளிப்பது மிக முக்கியமான காரணியாகுமென வைத்திய நிபுணர்கள் நம்புகின்றனர்.

குடிமக்களின் வருமான ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டும். ஆனால், அவர்கள் உயிருடன் இருக்கவேண்டும். உயிருடன் வைத்திருப்பது மிகவும் முக்கியம். ஏனெனில், 'உயிரோடு இருக்கும் நோயாளி, இறந்தவரை விட குணமடைய அதிக வாய்ப்புள்ளது' என்பதனாலாகும்.

நாளொன்றின் இறப்பு, முன்னைய நாளின் இறப்பு வீதத்தைவிட, அதிகரிக்குமாயின், பொருளாதாரத்துக்காக மட்டுமே நாட்டைத் திறந்துவைத்திருப்பதில் எவ்விதமான அர்த்தமும் இருக்காது. மக்களை உயிருடன் வைத்திருப்பதன் அவசியத்தை உணர்ந்து செயற்படவேண்டும். அதேபோல, சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதை இறுக்கமாக மக்கள் கடைப்பிடிக்கவேண்டும்.

ஒட்சிசன் தேவைப்பாடு அதிகரிக்குமாயின், அதனை முழுமையாகப் பூர்த்திசெய்யும் திறன், ஒவ்வொரு வைத்தியசாலையிலும் இருக்கிறதா? ஆனாலும், உயிருடன் இருப்பதற்கு ஒட்சிசனே முக்கியம் என்பதை அனைவரும் நினைவில் கொண்டு, பாதுகாப்பாக இருப்பதே உசிதமானது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.






அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களை, பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களைத் தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராளமனம் படைத்தோர், தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை.

இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள்; ஆசானை மறந்த மாணவர்கள்; கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என ஏராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும் போது, அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றது. எப்படி எச்சரிக்கை செய்தாலும், மக்கள் அதைக் கேட்காமல் பணம், பொருள்களை துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு, கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களைத் தங்களின் நிரந்தரத் தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்கள், எத்தர்கள் போன்றோரை மன்னிப்பதில்லை. பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி, தீயோரைக் களைவதில் தங்கியுள்ளது.

பருத்தியூர் பால- வைரவநாதன்

இலங்கையில் சீனா: விளங்கிக் கொள்ளலும் வினையாற்றலும் – 05

# உலக அரங்கில் சீனாவின் அணுகுமுறை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சீனாவின் இன்றைய எழுச்சி தற்செயலானதல்ல; அது, நீண்டகாலத் திட்டமிடலின் விளைவு.

கெடுபிடிப்போரின் முடிவில், தோற்றம் பெற்ற அமெரிக்க மைய உலக ஒழுங்கில், சீனா பலத்த சவால்களைச் சந்தித்தது. ஆசியாவின் மீதான அமெரிக்காவின் பிடி, முழுமையாக இறுகியிருந்த நிலையில், சீனாவின் எல்லையோர நாடுகளில் அமெரிக்க ஆதிக்கம், சீனாவையும் அசைத்துப் பார்க்க முயன்றது.

சீனாவில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த, அமெரிக்கா விரும்பியது; ஆனால், அது சாத்தியமாகவில்லை. சீனாவின் உழைப்பாளர்களின் எண்ணிக்கையும் அவர்தம் உழைக்கும் வலுவும், மெதுமெதுவாக உலகப் பொருளாதார சந்தையில், சீனாவுக்கு ஓர் இடத்தைக் கொடுத்தன.

மோதல்போக்கற்ற அயலுறவுக் கொள்கையின் தொடர்ச்சி, உலகப் பொருளாதார சந்தையில், சீனாவை மேலும் விரிவாக்கியது. அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீதான தாக்குதலும் அதைத் தொடர்ந்த 'பயங்கரவாதத்துக்கு எதிரான போரும்' உலகை ஆக்கிரமித்திருக்கையில், மெதுமெதுவாக சீனா வளர்ந்தது.

மூன்றாம் உலக நாடொன்றான சீனாவின் வளர்ச்சியை, ஏனைய மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சியோடு, மேற்குலக அறிஞர்கள் ஒப்பிட்டார்கள். 'பிரிக்ஸ்' நாடுகள் என அவற்றை அழைத்தார்கள். பிரேஸில், இந்தியா, தென்னாபிரிக்கா ஆகியவற்றின் வரிசையில் வைத்தே சீனாவையும் நோக்கினார்கள். அமெரிக்காவுக்குப் போட்டியான ஒரு கூட்டமைப்பாக இது கருதப்பட்டது.

'பிரிக்ஸ்' நாடுகளில், தமக்குச் சார்பான ஆட்சிகளை உருவாக்க அமெரிக்கா முண்டியடித்தது. பிரேஸிலில் லூலா டி சில்வா அகற்றப்பட்டார்; தென்னாபிரிக்காவில் ஜேக்கப் சூமா ஆட்சிக்கு வந்தார். இந்தியாவுடன் ஆயுத உடன்படிக்கைகளை செய்து கொண்டது. ரஷ்யாவில் புட்டினை அகற்ற, இன்னும் அமெரிக்கா முயன்றவண்ணம் உள்ளது.

இதன்வழி, சீனாவைத் தனிமைப்படுத்தி விட முயற்சிகள் நிகழ்ந்தன. கொஞ்சக் காலத்துக்கு முன்னரிலிருந்து, ஈரான் எத்தகைய மிரட்டலாகக் காட்டப்படுகிறதோ, 10 ஆண்டுகளுக்கு முன்னர் லிபியாவும் 20 ஆண்டுகளுக்கு முன்னர் ஈராக்கும் எத்தகைய மிரட்டல் என்று காட்டப்பட்டதோ, அப்படியே சீனாவும் அன்று காட்டப்பட்டது.

சீனாவைத் தனிமைப்படுத்த, பல்வேறு தளங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வணிகத் தடைகள் விதிக்கப்பட்டன; அவற்றைத் தாண்டியே சீனா முன்னேறியது. சீனா, பல மூன்றாம் உலக நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளை அதிகரித்தது. பல நாடுகளில் முதலிட்டது; கட்டமைப்பு விருத்திக்கு கடன்களை வழங்கியது. இந்நிலையிலேயே, 2008ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி, சீனாவின் இடத்தை உறுதி செய்தது.

இன்று, உலக ஆதிக்கத்துக்கான போட்டியில், சீனாவும் அமெரிக்காவும் நேரடியாக மோதுகின்றன. அதன் களங்கள் வேறானவை; முறைமைகள் வேறானவை. கெடுபிடிப்போர் காலச் சட்டகத்தில் இருந்து, மிகவும் வேறுபட்ட ஒரு போரில் இரண்டு நாடுகளும் ஈடுபட்டுள்ளன. இருந்தபோதும், இரு நாடுகளையும் ஒரேமாதிரி அணுகிவிட முடியாது.

அமெரிக்கா போல சீனாவும் ஏகாதிபத்தியம் என்று சிலர் அடையாளப்படுத்துகின்றார்கள். ஆனால், சீனாவை விளங்கிக் கொள்வதன் அடிப்படைகளில் ஒன்று, அமெரிக்கா போல, சீனாவும் ஏகாதிபத்தியமா என்பதை விசாரிப்பதாகும். சீனா, ஏகாதிபத்தியத்தை நோக்கிய பாதையில் நகர்கின்றது என்பதில் ஐயமில்லை. ஆனால், இன்னமும் அது அந்நிலையை எட்டவில்லை. சிலர், சீனாவுடன் ரஷ்யாவையும் இணைத்து, 'ஏகாதிபத்தியங்கள்' என்று அழைக்கிறார்கள்.

சீனாவினதும் ரஷ்யாவினதும் முதலாளித்துவத்தின் பாதை, அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளினதும் பிராந்திய வல்லரசுகளாகத் துடிக்கும் இந்தியா, பிரேஸில், தென்னாபிரிக்கா உட்பட்ட நவகொலனிகளினதும் முதலாளித்துவப் பாதையில் இருந்து மிகவும் வேறுபட்டது.

ரஷ்யாவிலும் சீனாவிலும், இன்றைய முதலாளித்துவ முறைமைகள், சோஷலிசத்துக்குக் குழிபறித்தே உருவாகின. சீனாவில் 1978ஆம் ஆண்டு தொட்டு, சோஷலிசக் கட்டமைப்புகள் திட்டமிட்டுக் குலைக்கப்பட்டுள்ளன. இலவசக் கல்வியும் இலவச உடல்நலச் சேவையும் சரிந்துள்ளபோதும், அவை முற்றாகக் கைவிடப்படாமையால், சீனா இன்றும் பொருளாதார நெருக்கடிகளையும் இயற்கை அனர்த்தங்களையும் கையாளுகிறது. எனினும், கிராமிய வறுமை, வேலைவாய்ப்பின்மை, குறைந்த ஊதியம், தொழிலாளரின் உரிமை மறுப்பு ஆகிய முதலாளித்துவ பாணியிலான பிரச்சினைகள் அங்குள்ளன.

சீனாவின் சனத்தொகையில் எல்லாமாக ஏழு சதவீதமளவில் உள்ள 50க்கும் மேற்பட்ட சிறுபான்மைத் தேசிய இனங்களும் தேசிய சிறுபான்மையினரும், பலவேறான பிரதேச சுயாட்சிகளுக்கு உரித்தானோராக உள்ளனர். இது, எழுச்சியின் விளைவாக அல்லாது, சீனத்தின் தேசிய இனக்கொள்கையாக நடைமுறைப்படுத்தப்பட்ட விடயமாகும். எந்த இனத்தினதும் மொழியுரிமையோ பிரதேச உரிமையோ மறுக்கப்படவில்லை; மாறாக வலியுறுத்தப்பட்டது.

இத்தகைய ஒரு சூழலில், சவூதி அரேபியாவின் உதவியுடன், 1990ஆம் ஆண்டுகளில், முஸ்லிம் தீவிரவாதம் சீனாவின் வடமேற்கில் தூண்டிவிடப்பட்டது. திபெத்திய பிரிவினை வாதமும், அதேகாலத்தில் ஊக்குவிக்கப்பட்டது. தலாய் லாமாவின் சமாதானம் போதிக்கும் துறவி, தீவிர திபெத்திய தேசியவாதி ஆகிய இரண்டு முகங்கள், இடத்துக்கு ஏற்றபடி காண்பிக்கப்பட்டன; கலகங்கள் தூண்டிவிடப்பட்டன. கலகக்காரர்களது வன்செயல்கள் காட்டப்படாது, அவர்களுக்கு எதிரான அரச நடவடிக்கை உலகுக்குக் காட்டப்பட்டது. நேபாளப் புரட்சியில் கூட, சீனாவின் கை இருந்ததாகக் கூறப்பட்டது. இவ்வாறு, ஒவ்வொரு பற்றைக்குப் பின்னாலும் ஒரு சீனப் பாம்பு காண்பிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே, இந்தியாவுக்கு எதிரான சீன மிரட்டல் பற்றிப் பேசப்படுகிறது.

சீனா, பகைமையற்ற ஓர் உலகில் இல்லை. சீனாவைக் 'கம்யூனிச அல்லது சிவப்பு மிரட்டல்' என்று அமெரிக்கா அழைத்துள்ளது. நிறவாதப் பண்புடன் 'மஞ்சள் ஆபத்து' என்றும் அழைத்துள்ளது. கொரோனா வைரஸை, முன்னாள் அமெரிக்கா ஜனாதிபதி 'சீன வைரஸ்' என்று தொடர்ந்து அழைத்ததும் தற்செயலானதல்ல.

சீனாவின் கடந்த இரண்டு தசாப்த பொருளாதார வளர்ச்சி, அதை எண்ணெய் உட்பட்ட மூல வளங்களின் மீது தங்கியிருக்கச் செய்துள்ளது. சீனாவின் அந்நிய முதலீடுகளும் ஏற்றுமதிகளும் பெருகி வருகின்றன. அமெரிக்காவும் மேற்குலகும் புறக்கணித்து வந்த, வறிய ஆபிரிக்க நாடுகளும் இலத்தீன் அமெரிக்க நாடுகளும், சீனாவின் புதிய சந்தைகளாகவும் முதலீட்டுக் களங்களாகவும் மூலப்பொருள் ஏற்றுமதியாளர்களாகவும் அமைந்தன.

இது, உலக அரசியல் அரங்கில் புதியதோர் அணுகுமுறை. நாடுகளைப் பிடித்தல், ஆட்சி மாற்றங்களைச் செய்தல் என்பனவே, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான அரசியல் அரங்கில், நாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் செல்வாக்குச் செலுத்துவதற்குமான வழிகளாக இருந்தன.

சீனாவின் இந்தப் புதிய அணுகுமுறை, அதற்கு உலகெங்கும் நண்பர்களைத் தேடிக் கொடுத்துள்ளது. ஆட்சிகள் மாறினாலும் நிலையான ஒன்றாக, சீனாவின் செல்வாக்குத் தொடர்கிறது. இதற்குச் சிறந்த உதாரணம் இலங்கை. 2015இல் ஆட்சிமாற்றம் நிகழ்ந்த போது ஏற்பட்ட பெரிய எதிர்பார்ப்பு, இலங்கையில் சீனாவின் செல்வாக்கு குறையும் என்பதாகும். ஆட்சிமாற்றம், துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்தும் என்ற நம்பிக்கை, மேற்குலகிடம் வலுவாக இருந்தது. ஆனால் அது சாத்தியமாகவில்லை. எனவே, ஆட்சிமாற்றம் என்ற மேற்குலக ஆயுதம், சீனாவின் விடயத்தில் பலனளிக்கப் போவதில்லை.

கடந்த ஒரு தசாப்தகாலமாக, பொருளாதாரத் தடைகள் என்ற பெயரில், சீனாவுடன் ஒரு மறைமுகப் போரில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. மேற்குலக நாடுகள் வணிகத்தடை, கப்பல் போக்குவரத்துத்தடை என்ற பெயர்களில் சீனக் கப்பல் மார்க்கங்களுக்கு இடையூறு ஏற்படுத்துவது அதிகரித்து வந்துள்ளது. சீனாவைக் கட்டுக்குள் கொண்டுவரும் இயலாமையின் விளைவுகள் இவை.

இந்தச் சவால்களுக்கு முகங்கொடுப்பது, சீனாவுக்கு அவசியமானது. அமெரிக்கா, உலக மேலாதிக்க நோக்கங்களுக்காகச் கடற்படை, இராணுவத் தளங்களை நிறுவுவது போல சீனாவும் செய்யலாம். இந்தியா செய்வது போன்று, அண்டை நாடுகள் மீது, தனது அரசியல் இராணுவ, வணிக ஆதிக்கத்தைத் திணிக்கலாம். இலங்கையின் போரிலும் அமைதியின் பேரிலான தலையீட்டிலும், இரண்டு நாடுகளும் இலங்கையின் இறைமையை சீரழித்துள்ளன என்பதை மறுக்கவியலாது.

சீனா, இதுவரை எந்த நாட்டிலும் இவ்வாறு செய்ததில்லை; இனிச் செய்யாது என்பதற்கு உத்தரவாதமில்லை. ஆனால், அவ்வாறு நடக்கும் வரை, நாம் வெறும் ஊகங்களினது அடிப்படையில், சீனா பற்றிய சரியான முடிவுகளுக்கு வர இயலாது.

சீனா முன்னெடுத்துவரும் 'ஒருபட்டி; ஒருவழி' திட்டமானது, உலகை புதிய வழிகளில் இணைக்கிறது; புதிய ஒழுங்கை நோக்கி நகர்த்துகிறது. இந்த நகர்வு இலகுவானதல்ல. பொருளாதார ரீதியில் நாடுகள் பிணைக்கப்பட்டுள்ள உலக நிலைவரத்தில், இந்த அணுகுமுறை சவாலானது. சீனாவுடன் பொருளாதார உறவுகளைப் பேணும், சீனாவின் பொருளாதார வலிமையில் தங்கியுள்ள நாடுகளின் எதிர்காலம், இந்தத் திட்டத்தின் வெற்றியில் தங்கியுள்ளது.

ஆதிக்கவாதிகள், காலனியாதிக்க காலத்தில் பிடுங்கித் தின்றார்கள்; இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், அடித்துப் பறித்தார்கள்; இனி என்ன செய்வார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

## கடிதங்கள்

### அக்கராயனில் குடிநீர் வழங்கல் இடை நிறுத்தம்

கிளிநொச்சி, அக்கராயன் குடிநீர்த் திட்டத்தின் இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக, ஐந்து நாள்களுக்கு மேலாகக் குடிநீர் வழங்கல், அக்கராயனில் இடம் பெறவில்லை.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால், 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்த் திட்ட வேலைகளின் மூலமாக, 488 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவது எனத் திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது 250 குடும்பங்களுக்கே குடிநீர் வழங்கல் இடம்பெற்று வந்த நிலையில், ஐந்து நாள்களுக்கு முன்னர் இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக, நீர் வழங்கல் இடம் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கராயன் குடிநீர் வழங்கல் திட்டத்தில், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டுள்ளது. ஆறு மாதத்தில் 488 குடும்பங்களுக்கும் முழுமையாக குடிநீர் வழங்குவோம் என்றவர்கள், அக்கராயன் மத்தி, கெங்காதரன் குடியிருப்பு, அக்கராயன் மேற்கு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 250 குடும்பங்களுக்கு மாத்திரமே குடிநீர் வழங்கி வரும் நிலையில், குடிநீர் வழங்கல் நடவடிக்கைகளும் அடிக்கடி தடைப்பட்டும் விடுகின்றது. இதனால் குடிநீர் நெருக்கடியை அக்கராயன் மக்கள் எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இவ்விடயம் தொடர்பாக, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஆகியன நல்லதொரு தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என, அக்கராயன் மக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

சென்னை:

சொகுசு கார் வரி விலக்கு வழக்கு:

# தனுஷுக்கு கண்டனம்

வெளிநாட்டில் இருந்து நடிகர் தனுஷ் இறக்குமதி செய்த சொகுசு காருக்கு நுழைவு வரி செலுத்த வேண்டுமென்று, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட காருக்கு நுழைவு வரி வசூலிக்க தடை கோரி நடிகர் தனுஷ், உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இக்காருக்கு 60 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாயை நுழைவு வரியாக செலுத்த வணிக வரித்துறை உத்தரவிட்டதை எதிர்த்து தனுஷ் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், 50 சதவீத வரியை செலுத்தும் பட்சத்தில் காரை பதிவு செய்ய வட்டார போக்குவரத்து அலுவலகத்துக்கு உத்தரவிட்டது. அதன் பின்னர் இந்த வழக்கு, நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் முன், நேற்றைய தினம் (05) விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி, “சாதாரண மனிதர்கள் கூட, தாம் வாங்கும் பொருட்களுக்கு வரிசெலுத்தி வருகின்ற நாட்டில், ஒரு நடிகர் வரி



செலுத்தத் தவறியமை கண்டிக்கத்தக்கது” என்றார். அவர், தனது மனுவில் தான் ஒரு நடிகர் என்பதை மறைத்தது குறித்தும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

முன்னதாக இதேபோன்று கார் இறக்குமதிக்கு வரி தடை கோரிய வழக்கில் நடிகர் விஜய்க்கும் நீதிமன்றம் கண்டித்தமை குறிப்பிடத்தக்கது.



# மதுரையில் ‘கலைஞர் குடிநீர்’

மதுரையில் ‘கலைஞர் குடிநீர்’ என்ற பெயரில் மறைந்த தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் படத்துடன் கூடிய குடிநீர் போத்தல்கள் விற்பனைக்கு வந்துள்ளன.

அரசின் திட்டமாக இல்லாமல், தனிநபர் ஒருவர் இவ்வாறு ‘கலைஞர் குடிநீர்’ என்ற பெயரில் குடிநீர் போத்தல்களை விற்பனை செய்வது தொடர்பாக, குறித்த குடிநீர் போத்தல்களின் வழங்குநர் பதிலளிக்கையில் “முதன்முறையாக விளம்பரத்துக்காக மதுரையில் விற்பனைக்கு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் அங்கிகாரத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ள உள்ளேன்” எனவும் விளக்கமளித்தார்.

இதனிடையே தனிநபர் ஒருவர் இது போன்று தலைவர்களின் பெயர், புகைப்படங்களை பயன்படுத்தலாமா என்ற சர்ச்சையும் தமிழகத்தில் எழுந்துள்ளது.



கேரளா:

18 ஆண்டுகளாக

# நுரையீரலில் சிக்கி இருந்த பேனா மூடி

கேரள மாநிலம் கொச்சி அருகே ஆலுவா பகுதியை சேர்ந்த சூரஜ் எனும் 32 வயதான இளைஞருக்கு நீண்டகாலமாக மூச்சுத் திணறல் இருந்து வந்துள்ளது.

அத்தோடு, இருமலாலும் பாதிக்கப்பட்டு வந்துள்ளார். இதற்காகப் பல இடங்களில் அவர் மருத்துவச் சிகிச்சை பெற்ற போதும் பூரண குணமடையவில்லை.

இந்நிலையில், கொச்சியில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சென்ற போது அவரைப் பரிசோரதித்த வைத்தியர்கள் அவரின்நுரையீரலில் சிறிய பொருள் ஒன்று இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

அறுவைச் சிகிச்சையின் போது அப்பொருள் பேனா மூடியெனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த இளைஞரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இவர் பாடசாலைக் காலத்தில் பேனா மூடியைப் பயன்படுத்தி விசில் அடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார் எனவும், அவ்வாறு அவர் விசில் அடித்த சந்தர்ப்பத்தில் பேனா மூடியொன்றை விழுங்கிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் வைத்தியர்கள் பிரச்சினைகள் எதுவும் இல்லை என்று கூறியதாகவும் இருந்தபோதிலும் இதன் பின்னரே தான் அடிக்கடி சுவாசப் பிரச்சினைகளுக்கு ஆளானதாகவும் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை

# 40 நாய்களுக்கு சமாதி எழுப்பியவர்

காளையார்கோவில் அருகே சித்தத்துரைச் சேர்ந்த 77 வயதான தங்கச்சாமி என்பவருக்கு சிறுவயதிலிருந்தே நாய்கள் வளர்ப்பதில் அதிகப் பிரியம் இருந்து வந்துள்ளது.

இதனால் அவை இறந்ததும், உடல்களை வெளியில் புதைக்க மனமின்றி, வீட்டைச் சுற்றிப் புதைத்துள்ளார். அதோடு மண்ணால் சமாதி கட்டி வழிபட்டு வருகிறார் எனவும் இதுவரை 40 நாய்களுக்கு சமாதிகள் கட்டியுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் “எனக்கு 12 சகோதர, சகோதரிகள் உள்ளனர். அவர்கள் திருமணமாகி வெவ்வேறு இடங்களில் வசிக்கின்றனர். எனக்குத் திருமணமாகாததால் தனியாக வசிக்கிறேன்.

அரசு கொடுக்கும் உதவித்தொகையில்தான் நானும், எனது குழந்தைகளான நாய்களும் சாப்பிடுகிறோம். நாய்கள் இறந்தாலும் அவைகள் எனது மனதை விட்டு அகலக்கூடாது என்பதற்காக, வீட்டைச் சுற்றிலும் புதைத்து சமாதி எழுப்பினேன். அவைகள் குறித்து நினைப்பு வரும்போது வழிபடுவேன்” என்றார்.



கிழக்கு லடாக்:

பொலிவியாவின்

# சாதனை முறியடிப்பு

இந்தியாவிலுள்ள கிழக்கு லடாக்கின் உம்லிங்லா பாஸ் பகுதியில் 19,300 அடி உயரத்தில், எல்லை வீதிகள் அமைப்பின் தீவிர முயற்சியால் வீதியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

52 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இத்தார் வீதியானது உலகிலேயே மிக உயரமான வீதியைக்கொண்ட நாடு என்ற பெருமையை இந்தியாவுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளது.

இதற்கு முன்னர் பொலிவியா நாட்டில், 18,953 அடி உயரத்தில் உதுருஞ்சு எரிமலைக்கு செல்லும் வீதியே உலகின் உயரமான வீதி என்ற பெருமையை பெற்றிருந்தது. அதனை இந்தியா இப்போது முறியடித்துள்ளது.

இப்பகுதியில் குளிர் காலங்களில் -40 பாகைக்குக் கீழ் வெப்பநிலை சென்றுவிடும். அப்படியொரு சவாலான சூழலில் இந்திய எல்லை வீதிகள் அமைப்பு ஊழியர்கள் இவ் வீதியை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.




The Ceylon Chamber of Commerce | Centre for SMEs | SEYLAN BANK PLC

இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன்

# செலான் வங்கி கைகோர்ப்பு

கொவிட்-19 தொற்றுப் பரவல் என்பது இலங்கையின் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை செலான் வங்கி இனங்கண்டுள்ளது. பல்வேறு பிராந்தியங்கள் மற்றும் துறைகளில் இதன் தாக்கம் மோசமாக அமைந்துள்ளது. நாட்டை மீளத் திறந்துள்ளதில் காணப்படும் சவால்களை வங்கி புரிந்து கொண்டுள்ளதுடன், சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு உதவும் வகையில் பொருத்தமான கொள்கைகளை வடிவமைப்பது மற்றும் இந்த நெருக்கடியான காலப்பகுதியை கடந்து செல்வதற்கு உதவ வேண்டியதன் அவசியத்தையும் வங்கி உணர்ந்துள்ளது.

சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைத் துறையை மீட்சியடையச் செய்யும் நிகழ்ச்சியின் அங்கமாக, இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் கைகோர்த்து, சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு பரந்தளவு பரிபூரண வியாபார அபிவிருத்தி சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்காக பிரத்தியேகமான ஹொட்லைன் இலக்கமொன்றை இலங்கை வர்த்தக சம்மேளன நிலையத்தில் நிறுவ முன்வந்துள்ளது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வியாபாரங்கள், ஏற்கெனவே வியாபார செயற்பாடுகளை முன்னெடுக்கும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்கள் போன்ற தரப்பினருக்கு இந்த நிலையம் இடையீட்டு அலகாக செயலாற்றி, தமக்கு காணப்படும் வியாபாரப் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தைச் சேர்ந்த நிபுணர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இணைப்பை ஏற்படுத்தும். இந்தச் செயற்பாட்டில் செலான் வங்கி கைகோர்த்துள்ளதனூடாக, வியாபார அபிவிருத்தி சேவைகளின் சென்றடைவு மேம்படுத்தப்படும் என்பதுடன், சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள், சவால்கள் மற்றும் தொழிற்பாட்டு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு இந்த நிலையத்தால் ஏதுவாக இருக்கும்.

செலான் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ரமேஷ் ஜயசேகர கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கை பொருளாதாரத்தில் அரைப் பங்குக்கு அதிகமான பங்கை சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்கள் கொண்டுள்ளதுடன், மில்லியன் கணக்கான மக்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்குகின்றன. எமது சூழல்கட்டமைப்பில் இந்த வியாபாரங்கள் மிகவும் முக்கியமான அங்கங்களாக காணப்படுகின்றன. அவர்களுக்கு வளர்ச்சிக்கு உதவுவதுடன், அவர்கள் மீட்சியடைவதற்கு நாம் உதவுகின்றோம். இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் எமது பங்காண்மை என்பது, எமது சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர் வாடிக்கையாளர்களுக்கு பரிபூரண வியாபார அபிவிருத்தி சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக அமைந்திருக்கும். எமது தேசத்தின் உற்பத்தித்திறனை உயர்ந்த நிலையில் பேணும் வகையில் பணியாற்றுவதுடன், எமது வாடிக்கையாளர்களின் நிதி ஆரோக்கிய நிலை என்பது சீராக காணப்படுகின்றமையை உறுதி செய்ய நாம் முயற்சிக்கின்றோம்” என்றார்.

சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்கான இலங்கை வர்த்தக சம்மேளன நிலையத்தினூடாக வியாபார ஆலோசனை மற்றும் வியாபார வழிகாட்டல் சேவைகளையும் வழங்கப்படுவதற்கு மேலதிகமாக கருத்தரங்குகள், வெபினார்கள், பயிற்சிப்பட்டறைகள், பயிற்சி நிகழ்ச்சிகள் போன்றன முன்னெடுக்கப்படும். சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்து மேம்படுத்தும் வகையில் வெபினார்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், தமது வியாபார கட்டமைப்புகளை மீளமைப்பு செய்வதற்கான மிகவும் பொருத்தமான வழிமுறைகளை கவனத்தில் கொண்டு, அதனூாக தொற்றுப் பரவலின் பின்னர் இலாபத்தை அதிகரித்துக் கொள்வது பற்றி கவனம் செலுத்த ஏதுவாக அமைந்திருக்கும். மேலும், செலான் வங்கியைச் சேர்ந்த ஆலோசகர்களும் பயிற்சி அமர்வுகளை முன்னெடுத்து, புதிய வியாபார சிந்தனைகளை தூண்டுவது மற்றும் பங்காண்மையினூடாக வாடிக்கையாளர் அறிவை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

நாட்டில் தற்போது நிலவும் நிலையை கவனத்தில் கொண்டு, ஒன்லைன் ஊடாக ஆலோசனை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியை வர்த்தக சம்மேளனம் ஏற்படுத்தியுள்ளது. இதனூடாக நிலையத்துக்கு விஜயம் செய்ய வேண்டிய தேவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலின் பிரகாரம் கடன் மீளச் செலுத்துவதற்கான சலுகைக் கால வசதியையும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைத் துறைக்கு வங்கி வழங்கியுள்ளது. சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கு வியாபார விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிக்காக தொழிற்படு மூலதன கடன்களை வங்கி வழங்கும் என்பதுடன், அதனூடாக தற்போதைய பொருளாதார சூழலினால் பாதிக்கப்பட்டுள்ள வியாபார உரிமையாளர்களுக்கு உதவும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

SLT–MOBITEL இன் BizChat இனால்

# FB Chatbot அறிமுகம்

SLT-MOBITEL, சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் மற்றும் நுண் வியாபாரங்களுக்கு தமது வியாபார செயற்பாடுகளை சமூக ஊடக கட்டமைப்பு மாற்றியமைத்துக் கொண்டு, நவீன தொழில்நுட்பத்தின் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள உதவும் வகையில் Facebook Chatbot ஐ அறிமுகம் செய்து தனது SLT-MOBITEL BizChat செயற்பாடுகளை மேம்படுத்தியுள்ளது.




Artificial Intelligence (AI) இனால் SLT-MOBITEL BizChat வலுவூட்டப்பட்டுள்ளதுடன், தன்னியக்கமயப்படுத்தப்பட்ட தொடர்பாடல் அனுபவமாக உள்ளது. பெருமளவு வாடிக்கையாளர் கோரிக்கைகளுக்கு அவர்களின் சொந்த மொழியில் பதிலளிப்புகளை வழங்குவதாக அமைந்துள்ளது. SLT-MOBITEL BizChat இனால் இலங்கையின் நிறுவனங்களுக்கு இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வாடிக்கையாளர்களுக்கு தொடர்பாடல்களை பிரத்தியேகமான முறையில் மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது.

SLT-MOBITEL BizChat இன் பிந்திய உள்ளடக்கமாக FB Chatbot காணப்படுவதுடன், சமூக ஊடக கட்டமைப்பில் வாடிக்கையாளர்களுடன் ஈடுபாடுகளைப் பேணுவதற்கு சிறிய வியாபாரங்களுக்கு பிரத்தியேகமாக வழிமுறையாக அமைந்துள்ளது. FB Chatbot ஐ பதிவு செய்து கொள்வது என்பது எளிமையான செயன்முறையாக அமைந்திருப்பதுடன், எளிமையான குறியீட்டை பிரதி செய்து இணையத்தளத்தில் அதை பதிவு செய்வதை மேற்கொள்ள வேண்டும், SLT-MOBITEL இனால் பதிவு செய்யும் சேவைகளும் வாடிக்கையாளர்களின் கோரிக்கையின் பிரகாரம் வழங்கப்படும்.

முக்கியமாக, நிறுவனத்தின் Facebook பக்கத்தில் FB Chatbot ஐ நிறுவுவதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு மதிநுட்பமான தொடர்பாடல்களை நேரடியாக மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். விசேடமாக இணையத்தளமொன்றைக் கொண்டிருக்காத சிறு வியாபாரங்களுக்கு SLT-MOBITEL BizChat இன் அனுகூலங்களை FB Chatbot ஊடாக பெற்றுக் கொள்ள முடியும். ஒன்லைனில் தமது பிரசன்னத்தை மேம்படுத்திக் கொள்ளவும், வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ளவும், சமூக ஊடகங்களின் சக்தியை பயன்படுத்திக் கொள்ளவும் உதவியாக இருக்கும்.

தொற்றுப் பரவலுடன், தனிமைப்படுத்தல் என்பது புதிய வழமையாக மாறியுள்ள நிலையில், சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளன. இந்நிலையில் FB Chatbot ஐ பின்பற்றுவது பெறுமதி வாய்ந்ததாக அமைந்துள்ளது. சிறு வியாபாரங்களுக்கு பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்க chatbot உதவியாக அமைந்திருக்கும். இதில் வாடிக்கையாளர் உதவிச் சேவையை தன்னியக்கமயப்படுத்துவது, வர்த்தக நாமம் தொடர்பான விழிப்புணர்வை கட்டியெழுப்புவது, புதிய வாடிக்கையாளர்களை கையகப்படுத்துவது போன்றன அடங்கியுள்ளன.சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு SLT-MOBITEL BizChat என்பது பெருமளவு அனுகூலங்களை வழங்குவதாக அமைந்துள்ளது.

ஐ. அமெரிக்கா

‘டெல்டா’வை விட மோசமான கொரோனா மாறி:

# அமெரிக்காவில் அச்ச நிலைமை



தற்போதைய கொரோனாத் தடுப்பு மருந்துகளுக்குக் கட்டுப்படாத, பயங்கரமான கொரோனா மாறியை, ஐக்கிய அமெரிக்கா எதிர்கொள்ளும் என, அந்நாட்டின் ஒவ்வாமை மற்றும் தொற்று நோய்களுக்கான தேசிய நிறுவகத்தின் பணிப்பாளர் அந்தோனி பௌசி நேற்று முன்தினம் (04) தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவின் தற்போதைய கொரோனாத் தொற்று அதிகரிப்பைக் கட்டுப்படுத்தாது விட்டாலே இந்நிலைமை ஏற்படும் என பௌசி தெரிவித்துள்ளார்.

ஹெய்ட்டி

முன்னாள் ஜனாதிபதியை

## மெய்ப் பாதுகாவலர்களே கொலை செய்தனர்

ஹெய்ட்டியின் முன்னாள் ஜனாதிபதி ஜொவெனெல் மொய்ஸேயை, அவரது மெய்ப்பாதுகாவலர்களே கொலை செய்தனர் என, ஐக்கிய அமெரிக்காவின் மியாமியைத் தளமாகக் கொண்ட பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவர் அன்டோனியோ இன்றியாகோ நேற்று முன்தினம் (04) தெரிவித்துள்ளார்.



முன்னாள் ஜனாதிபதி மொய்ஸேயைக் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் கொலம்பிய மெய்ப் பாதுகாவலர்களைக் குறித்த நிறுவனமே பணிக்கு அமர்த்தியிருந்தது.

இந்நிலையில், தனிப்பட்ட காவலர்களாக தனது ஆயுதந்தரிக்காத பாதுகாப்பு ஒப்பந்தக்காரர்கள் பணிக்கமர்த்தப்பட்டதாக தான் நம்புவதாகத் தெரிவித்த இன்றியாகோ, ஆனால் இறுதி நிமிட மாற்றமாக முன்னாள் ஜனாதிபதி மொய்ஸே மீதான பிடிவிறாந்துக்காக பணியாற்றுமாறு கோரப்பட்டதாகக் கூறியுள்ளனர்.

பங்களாதேஷ்

## திருமண நிகழ்வில் மின்னல் தாக்கம்

### 17 விருந்தினர் பலி



பங்களாதேஷில் மின்னலால் தாக்கப்பட்டமையை அடுத்து, திருமணக் கொண்டாட்டம் ஒன்றின் குறைந்தது 17 விருந்தினர்கள் பலியானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாப்பிள்ளை உள்ளடங்கலாக 14 பேர் காயமடைந்துள்ளனர். ஆனால், இச்சடங்கின்போது மணமகள் கலந்து கொண்டிருக்கவில்லை.

திருமணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் பலதடவைகள் இடி தாக்கத்துக்கு உட்பட்டதாக தாக்கியதாக உள்ளூர் மக்கள் தெரிவித்தனர்.

இஸ்ரேல்

லெபனானிலிருந்தான

## றொக்கெட்டுகள் இஸ்ரேலைத் தாக்கின



லெபனானிலிருந்து ஏவப்பட்ட இரண்டு றொக்கெட்டுகள் இஸ்ரேலை நேற்று முன்தினம் (04) தாக்கியுள்ளன.

இதையடுத்து பதிலடியாக ஆட்லறித் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

மலைப்பாங்கான இஸ்ரேலிய முன்னரங்கில் எதுவித உயிரிழப்புகளும் ஏற்படவில்லை என இஸ்ரேலிய மகென் டேவிட் அடொம் தேசிய அம்பியுலன்ஸ் சேவை தெரிவித்துள்ளது. குறித்த பகுதியிலேயே றொக்கெட்டுகள் புல்லில் தீயை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில், றொக்கெட் தாக்குதலுக்கு உடனடியாக உரிமை கோரப்பட்டிருக்கவில்லை. ஹிஸ்புல்லாவின் கட்டுப்பாட்டில் உள்ள தென் லெபனான் பகுதியில் இருந்தே றொக்கெட்டுகள் ஏவப்பட்டிருந்தன.

அந்தவகையில், லெபனானிலிருந்து மூன்று றொக்கெட்டுகள் ஏவப்பட்டதாகவும், ஒன்று இஸ்ரேலிய எல்லைக்கு முன்னாள் வீழ்ந்ததாகவும், ஏனையவை இஸ்ரேலுக்குள் தாக்கியதாக அறிக்கை ஒன்றில் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஐ. அமெரிக்கா

கலிபோர்னியா காட்டுத்தீயால்

## ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்



மிக விரைவாகப் பரவி வரும் காட்டுத் தீ, வீடுகளை எரித்ததுடன், ஆயிரக்கணக்கானோரை ஐக்கிய அமெரிக்காவின் வட கலிபோர்னியாவில் இருந்து வெளியேற்ற வைத்துள்ளது.

இக்காட்டுத்தீயால் குறைந்தது 110 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் புகை மண்டலம் அவதானிக்கப்பட்டுள்ளது.

2,400 ஏக்கர்களை முதலிரண்டு மணித்தியாலங்களில் காட்டுத் தீ எரித்ததாக, கலிபோர்னியா வன மற்றும் தீ பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

டோக்கியோ 2020: அஞ்சலோட்ட இறுதி வாய்ப்பை

# அமெரிக்கா தவறவிட்டது

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளின் ஆண்களுக்கான 4 x 100 மீற்றர் அஞ்சலோட்ட இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற ஐக்கிய அமெரிக்கா தவறியுள்ளது.

முதலாவது சுற்றுப் போட்டியில் ஆறாவதாகவே ஐ. அமெரிக்கா வந்திருந்தது.

இந்நிலையில், ஆண்களுக்கான 10 கிலோ மீற்றர் மரதன் நீச்சலில், ஜேர்மனியின் புளோரியன் வெல்புரோக் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார். ஹங்கேரியின் கிறிஸ்டோஃப் றஸோவ்ஸ்கி இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, மூன்றாமிடத்தை இத்தாலியின் கிரேகொரியோ பல்றினேரி பெற்றார்.




இதேவேளை, ஆண்களுக்கான வெண்கலப் பதக்கத்துக்கான ஹொக்கிப் போட்டியில் 5-4 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை வென்று இந்தியா வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்தது.

இந்நிலையில், ஆண்களுக்கான 20 கிலோ மீற்றர் நடைப் போட்டியில் இத்தாலியின் மஸ்ஸிமோ ஸ்டானோ தங்கப் பதக்கத்தை வென்றதுடன், ஜப்பானின் கொகி லெகெடா வெள்ளிப் பதக்கத்தையும், டொஷிஸு யமனிஷி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

அந்தவகையில், இலங்கை நேரப்படி நேற்றுப் பிற்பகல் மூன்று மணி வரையில், 33 தங்கம், 24 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் சீனா காணப்படுகின்றது. 27 தங்கம், 34 வெள்ளி, 24 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமித்தில் ஐக்கிய அமெரிக்கா காணப்படுவதுடன், 21 தங்கம், எட்டு வெள்ளி, 14 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் ஜப்பான் காணப்படுகின்றது.

இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியிலும்

## அவுஸ்திரேலியாவை வென்ற பங்களாதேஷ்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியிலும் பங்களாதேஷ் வென்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த போட்டியில் ஐந்து விக்கெட்டுகளால் எட்டுப் பந்துகள் மீதமிருக்கையில் பங்களாதேஷ் வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 121/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 45 (42), மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் 30 (25), மிற்செல் ஸ்டார்க் ஆ.இ 13 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: முஸ்தபிசூர் ரஹ்மான் 3/23 [4], ஷொரிஃபுல் இஸ்லாம் 2/27 [4], மஹெடி ஹஸன் 1/12 [3], ஷகிப் அல் ஹஸன் 1/22 [4], சௌமியா சர்க்கார் 0/7 [1], நசும் அஹ்மட் 0/29 [4])

பங்களாதேஷ்: 123/5 (18.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஃபிஃப் ஹொஸைன் ஆ.இ 37 (31), ஷகிப் அல் ஹஸன் 26 (17), மஹெடி ஹஸன் 23 (24), நுருல் ஹஸன் ஆ.இ 22 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஸ்தன் அகர் 1/17 [4], ஜொஷ் ஹேசில்வூட் 1/21 [3.4], அடம் ஸாம்பா 1/24 [4])

போட்டியின் நாயகன்: அஃபிஃப் ஹொஸைன்

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது மிர்பூரில் இலங்கை நேரப்படி இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## முன்னிலையில் இந்தியா

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் முன்னிலையில் இந்தியா காணப்படுகின்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் நொட்டிங்ஹாமில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இந்த டெஸ்டின் முதல் நாள் முடிவிலேயே இந்தியா முன்னிலையில் காணப்படுகின்றது.




ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து


இங்கிலாந்து: 183/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 64, ஜொனி பெயார்ஸ்டோ 29, சாம் கர்ரன் ஆ.இ 27, ஸக் குறொலி 27, டொம் சிப்லி 18 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 4/46, மொஹமட் ஷமி 3/28, ஷர்துல் தாக்கூர் 2/41, மொஹமட் சிராஜ் 1/48)

இந்தியா: 21/0

டோக்கியோ 2020:

## 200 மீற்றரில் தங்கம் வென்றார் டி கிராஸ்

ஜப்பானில் நடைபெற்று வரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளின் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் கனடாவின் அன்ட்ரே டி கிராஸ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.




19.62 செக்கன்களில் போட்டித் தூரத்தை டி கிராஸ் கடந்ததுடன், 19.68 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்த ஐக்கிய அமெரிக்காவின் கென்னி பெட்னரெக் வெள்ளிப் பதக்கத்தை வென்றதுடன், 19.74 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்த ஐ. அமெரிக்காவின் நோவா லைல்ஸ் வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்தார்.

டோக்கியோ 2020:

## பதக்கம் வென்ற 12 வயதுச் சிறுமி

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில், 12 வயதான சிறுமி ஒருவர் வெள்ளிப் பதக்கம் ஒன்றைப் பெற்றுள்ளார்.

பெண்களுக்கான பூங்கா ஸ்டேட்போர்ட்டிங்கிலேயே 12 வயதான ஜப்பானின் கொகொனா ஹிராகி வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்.

19 வயதான ஜப்பானின் சகுரா யொஸொஸுமி தங்கப் பதக்கத்தை வென்றதுடன், பிரித்தானியாவின் 13 வயதான ஸ்கை பிறவுண் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 06 ஓகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது